# வைப்பகம்

2021 யூலை - செத்தெம்பர் மலர் 6 இதழ் 7 - 9

அறிவுத் தேடலின் மையம்

ரூ. 20/-

02 வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்கான திரவத்தன்மை முகாமைத்துவ உபாயங்கள்

11 நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையில் வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் வகிபாகம்

15 இலங்கையின் தென்பகுதியின் பொருளாதாரத்தினைக் கட்டமைத்த கருவா வியாபாரம்

26 பொருளாதார முறைமையின் செயற்பாட்டுச் சுற்றோட்டமும் நிதியியல் முறைமையின் முக்கியத்துவமும்

ISSN 2513-3012

இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்

இக்கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் எழுத்தாளர்களின் கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை

ஆண்டுச் சந்தா (அஞ்சல் கட்டணம் உட்பட): ரூ.320/-

# வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்கான திரவத்தன்மை முகாமைத்துவ உபாயங்கள்

டபிள்யு. ஜி. ஆர். ஹர்ஷப்பிரியா
மூத்த உதவிப் பணிப்பாளர்
பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்

## 1. வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவம்

நாடொன்றில் ஒதுக்கு முகாமைத்துவம் என்பது, போதுமான அலுவல்சார் அரச துறை வெளிநாட்டுச் சொத்துக்கள், நாடொன்றிற்கான அல்லது ஒன்றியமொன்றிற்கான வரைவிலக்கணம் செய்யப்பட்ட வீச்சிலான குறிக்கோள்களைப் பூர்த்தி செய்வதற்காக அதிகாரிகளினால் கட்டுப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துகின்றதொரு செய்முறையாகும். எனவே, ஒதுக்கு முகாமைத்துவ நிறுவனம் வழமையாக ஒதுக்கு முகாமைத்துவத்திற்கும் அதனுடன் சேர்ந்த இடர்நேர்வுகளைத் தாங்கிக் கொள்வதற்கும் பொறுப்புடையதாக்கப்படுகிறது. உண்மையாக, அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் பரந்த வீச்சிலான குறிக்கோள்களுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் வைத்திருக்கப்படுகின்றன.

### ஒதுக்குகளை வைத்திருப்பதற்கான காரணங்கள்

- நாணய மற்றும் செலாவணி வீத முகாமைத்துவத்திற்கான கொள்கைகளுக்கு ஆதரவளிப்பதும் நம்பிக்கையினைப் பேணுவதும் தேசிய அல்லது ஒன்றிய நாணயத்தின் ஆதரவில் தலையீடு செய்வதற்கான இயலாற்றலை உள்ளடக்கியிருக்கிறது.
- நெருக்கடியான நேரத்தில் அல்லது கடன்பாடுகளுக்கான வழிவகைகள் கட்டுப்படுத்தப்படும் காலப்பகுதியில் அதிர்வுகளை ஈர்த்துக் கொள்வதற்கு வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையினைப் பேணுவதன் மூலம் வெளிநாட்டுக் காரணிகளினால் பாதிக்கப்படும் தன்மை மட்டுப்படுத்தப்படுகிறது.

**வரைபடம் 1 - சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் மற்றும் துணைநில் வீத வீச்சு**



- நாடு அதன் வெளிநாட்டுக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருப்பதனை சந்தைகளுக்குத் தெரிவிப்பதன் மூலம் நம்பிக்கை மட்டமொன்றினை வழங்குகிறது.

- வெளிநாட்டுச் சொத்துக்களின் மூலம் உள்நாட்டு நாணயங்களுக்கு ஆதரவளிக்கப்படுவதனை எடுத்துக்காட்டுகிறது.

- அரசாங்கம் அதன் வெளிநாட்டுச் செலாவணித் தேவைகளையும் வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகளையும் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்திற்கு உதவுவதுடன் தேசிய அனர்த்தம் அல்லது அவசர காலங்களுக்கான ஒதுக்கொன்றினையும் பேணுகிறது.

**வெளிநாட்டு ஒதுக்குகளில் ஏற்படும் பாரிய அதிகரிப்பின் தாக்கங்கள்**

வெளிநாட்டு நாணய ஒதுக்குகளை வைத்திருப்பதற்கு பல காரணங்கள் காணப்படுகின்ற போதும் வெளிநாட்டு ஒதுக்கு உடமைகள் அதனுடன் இணைந்த செலவுகளையும் கொண்டிருக்கின்றன.

வெளிநாட்டு ஒதுக்கு உடமையின் செலவுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்:

- சென்மதி நிலுவையின் மிகை அல்லது குறையின் காரணமாக பணநிரம்பலில் ஏற்படும் தாக்கத்தினை நீக்குதல்: ஒதுக்குகள் ஒன்றுசேர்வதன் பணவீக்க நாணயத் தாக்கத்தினைச் சமநிலைப்படுத்தல் உள்நாட்டுப் படுகடன் வழங்கல் மூலம் நிகழக்கூடியவை (பணநிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பினை எதிரீடு செய்வதற்காக).

- கொண்டு செல்லல் செலவு: அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் மீதான வட்டி வீதம், ஒதுக்குகள் மீதான வருவாயினை விஞ்சக்கூடும்.

- அமையச் செலவுகள்: சென்மதி நிலுவையின் மிகை அல்லது குறையின் காரணமாக பணநிரம்பலில் ஏற்படும் தாக்கத்தினை நீக்குதல், உள்நாட்டு நிதியியல் முறைமையிலிருந்து மூலவளங்கள் வெளிச்செல்வதற்குக் காரணமாகலாம்.

- ஐந்தொகை இடர்நேர்வுகள்: பாரிய ஐந்தொகைகள் உள்நாட்டு நாணய உயர்வுகள், சென்மதி நிலுவையின் மிகை அல்லது குறையின் காரணமாக பணநிரம்பலில் ஏற்படும் தாக்கத்தினை நீக்குதல் மற்றும் சொத்துக்களின் சந்தைப்படியான மதிப்பு என்பனவற்றின் காரணமாக ஏற்படும் பாரிய நிதி இழப்புக்கள் மத்திய வங்கியைப் பாதிப்புக்குட்படுத்தலாம்.

- பணவீக்க இடர்நேர்வு: ஐந்தொகையில் ஏற்படும் விரைவான விரிவாக்கம், சென்மதி நிலுவையின் மிகை அல்லது குறையின் காரணமாக பணநிரம்பலில் ஏற்படும் தாக்கம் நீக்கப்படாவிடின், நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

**2. வெளிநாட்டு ஒதுக்குகளிலுள்ள திரவத்தன்மையினை முகாமை செய்வதன் முக்கியத்துவம்**

பொருளாதார உலகமயமாக்கல் படிப்படியாக ஆழமடைந்தமை மற்றும் பன்னாட்டு வர்த்தகத்தின் விரைந்த அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மையின் தாக்கம் அண்மைய ஆண்டுப்பகுதியில் கணிசமாக பெரிதாகியவிடத்து, வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் மட்டத்தினை தொடர்ந்து ஏற்பட்ட தாக்கமும் உயர்வடைந்தது. பொருளாதாரம் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீது ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கத்தினை கருத்திற்கொள்கையில், வினைத்திறன் மிக்க வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவப் பிரச்சனை கணிசமானளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியிருக்கின்றது. பெரும்பாலான நாடுகளில், வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் அளவில் இடம்பெற்று வருகின்ற விரைவான விரிவாக்கம் காரணமாக வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் திரவத்தன்மை முகாமைத்துவத்தின் இன்றியமையாமை அதிகரித்து வருகின்றது.

அதனுடன் தொடர்பான இன்னொரு முக்கிய அம்சம் யாதெனில், நாளாந்த கொடுப்பனவுகளைக் கையாள்வதற்காக திரவத்தன்மையினைப் பேணுவதாகும். போதுமான திரவத்தன்மையானது பற்றாக்குறையின் இடர்நேர்வினைக் குறைக்கக்கூடியதாகவும் நிதியியல் முறைமையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தக்கூடியதாகவும் உறுதியான பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தக்கூடியதாகவும் இருக்கும். எனினும், வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் மிகையான திரவத்தன்மை மேலே விளக்கப்பட்டவாறு உடமையில் வைத்திருப்பதற்கான செலவில் உயர்வினை ஏற்படுத்தும்.

**3. வெளிநாட்டு ஒதுக்குகளுக்கான திரவத்தன்மை முகாமைத்துவம்**

திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவதற்கு நிதியியல் கருவிகளை/ சாதனங்களை பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்ற வேளையில் வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமைப்படுத்துவது அவற்றின் முக்கிய பண்புகளுடன் கீழே ஆராயப்படுகின்றன.

**அ. திறைசேரி உண்டியல்கள்**

திறைசேரி உண்டியல்கள் குறுங்கால நிதிகளைத் திரட்டுவதற்காக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட உள்நாட்டு கழிவிடல் சாதனங்களாகும். திறைசேரி உண்டியல்களுக்கான சந்தை விலைக்குறிப்பீடுகள் கணிசமானளவிற்கு வேறுபடும். பொதுவாக, அவை

கழிவிடல் வீதத்தில் வழங்கப்படுவதுடன், ஐரோப்பிய ஒன்றியத்தில் இது நாணய சந்தை விளைவில் குறிப்பிடப்படுகிறது. திறைசேரி உண்டியல் நாட்டிற்கான இடர்நேர்வினையும் சந்தைப்படியான இடர்நேர்வினையும் கொண்டிருக்கிறது.

ஐக்கிய அமெரிக்காவில், கிரமமான அட்டவணையொன்றின்படி 4-வாரங்கள், 13-வாரங்கள், 26-வாரங்கள் மற்றும் 52-வாரங்களில் ஏலமிடப்படுகின்றன. ஐக்கிய இராச்சியத்தில், இது 1-மாதம், 3-மாதம், 6-மாதம் மற்றும் 12-மாதங்களாகக் காணப்படுகின்றது. ஜேர்மன் திறைசேரி உண்டியல்கள் ("புப்பிள்ஸ்") 6-மாதங்கள், 12-மாதங்களாகக் காணப்படுகின்றன. திறைசேரி உண்டியல் கைமாற்றத்தக்க சாதனமாகும். ஐக்கிய அமெரிக்காவின் திறைசேரி உண்டியல்கள் 2021 பெப்புருவரி இறுதியில் 4.8 றில்லியன் அளவிலான வெளிநின்ற வழங்கலைக் கொண்டிருப்பதனால் உயர் திரவத்தன்மை வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன.

திறைசேரி உண்டியல் இரண்டாந்தரச் சந்தையில் திரவத்தன்மையினைக் கொண்டிருப்பதனால், குறிப்பிட்ட திகதியில் ஏற்படக்கூடிய ஏதேனும் பொறுப்புக்களை நாம் பொருத்தம் செய்ய வேண்டுமெனில், பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு திறைசேரி உண்டியல்களைத் தேவையான தொகையில் வாங்குவதன் மூலம் பொருத்தம் செய்யமுடியும்.

குறுங்காலத்தில் முதலீடு செய்வதற்கு ஒதுக்குச் சொத்துப்பட்டியலுக்குக் கூடுதலான வாய்ப்புக்கள் காணப்படுகின்றதொரு சூழ்நிலையில், ஏலங்களூடாக முதலாந்தர சந்தையில் திறைசேரி உண்டியலை வாங்குவதன் மூலம் இரண்டாந்தரச் சந்தை விளைவு தொடர்பில் மேலதிக வருமானங்களை ஈட்டுவதற்கு சாத்தியங்கள் காணப்படுகின்றன. முதலாந்தரச் சந்தையில் முதலீடு செய்வதில் காணப்படும் மட்டுப்படுத்தல் யாதெனில் அங்கு நிலையான முதிர்ச்சிகள் மட்டும் காணப்படுவதேயாகும். இங்கு, வெளிநாட்டு ஒதுக்கில் முதலீடு செய்யும் சொத்துப்பட்டியல் முகாமையாளர் மேலதிக வருமானத்தினையா அல்லது திரவத்தன்மையினையா தெரிவுசெய்வது என்பதனைத் தீர்மானிக்க வேண்டியிருக்கும்.

### (ஆ) தவணை வைப்புக்கள்

தவணை வைப்புக்கள் என்பது, பணத்தினை நிலையான முதிர்ச்சியொன்றில் வட்டி உழைக்கின்ற வங்கிக் கணக்கொன்றில் வைப்பலிடுவதாகும். வைப்பின் காலம் 1 நாளாகவோ (ஓரிரவு) அல்லது நிர்ணயிக்கப்பட்ட காலமாகவோ இருக்கலாம். வட்டி வழமையாக முதிர்ச்சியில் செலுத்தப்படுகிறது (நீண்ட கால வைப்புக்களுக்கு அரையாண்டிற்கொரு தடவையோ அல்லது வருடாந்த அடிப்படையிலோ செலுத்தப்படலாம்). தீர்ப்பனவுகள் ஐ.அ. உள்நாட்டுச் சந்தையில் வழமையாக அதே நாளன்றும் யூரோ சந்தைகளில் உடனடியாகவும் (t+2) இடம்பெறுகின்றன. நிதியியல் சந்தைகளில் வைப்புக்கள் வட்டி வீதங்களில் குறிப்பீடு செய்யப்படுவதுடன் அவை கைமாற்றத்தகாத சாதனங்களுமாகும். இதில் முதலீட்டாளர்கள் முதிர்ச்சிக்கு முன்னர் வைப்புக்களை விற்க முடியாது. தவணை வைப்புக்கள் கைமாற்றத்தகாதது என்பதனால், பொறுப்பின் உரிய திகதியில் பொருத்தம் செய்யும் விதத்தில் வைப்புக்களை வைத்திருப்பது முக்கியமானதாகும்.

கைமாறத்தகாத வைப்புக்களின் தன்மை காரணமாக திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் கொடுகடன் இடர்நேர்வு என்பனவற்றுடன் சேர்ந்து காணப்படும் திறைசேரி உண்டியல் தொடர்பில் வழமையாக கூடுதலான மிகை இலாபம் வழங்கப்படுகிறது. ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் இவ்வைப்புக்களை தேவைக்கேற்ப மாற்றியமைக்கக் கூடியதாக இருப்பதனால் வைப்புக்களிலிருந்து பொறுப்புக்களுக்கு காசுப்பாய்ச்சலை இலகுவாகப் பொருத்தம் செய்யக்கூடியதாக இருக்கிறது.

### (இ) வைப்புச் சான்றிதழ்கள்

இச்சான்றிதழ், நிலையான முதிர்ச்சியொன்றிற்காகவும் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பணச் சந்தை விளைவிற்காகவும் வழங்கல் வைப்பக நிறுவனத்தில் பணம் வைப்புச் செய்யப்பட்டிருப்பதனை எடுத்துக்காட்டுகின்ற ஒரு சான்றிதழாக விளங்குகிறது. வைப்புச் சான்றிதழின் காலம் நிலையான காலமொன்றாக விளங்குவதுடன் வழமையாக 12 மாத வீச்சினைக் கொண்டதாகக் காணப்படுகிறது. வட்டியானது வழமையாகக் கூப்பனாக முதிர்ச்சியில் செலுத்தப்படுகிறது (நீண்ட கால வைப்புச் சான்றிதழ்களுக்காக ஒவ்வொரு 6 மாதம் அல்லது ஒவ்வொரு ஆண்டும் செலுத்தப்படுகிறது). ஐக்கிய அமெரிக்க உள்நாட்டுச் சந்தையில் வைப்புச் சான்றிதழ்கள் அதேநாளன்று தீர்ப்பனவு செய்யப்படுவதுடன் யூரோ சந்தைகளில் உடன் அடிப்படையில் (t+2) தீர்ப்பனவு செய்யப்படுகிறது.

வைப்புச் சான்றிதழ்கள் கைமாற்றத்தக்க மற்றும் கைமாற்றத்தகாதது என இரண்டு வடிவங்களிலும் வழங்கப்படுகிறது. கைமாற்றத்தக்க வைப்புச் சான்றிதழ்கள் முதிர்ச்சிக்கு முன்னதாக முதலீட்டாளரினால் விற்பனை செய்ய முடிகின்ற வேளையில் கைமாற்றத்தகாத வைப்புச் சான்றிதழ்கள் வைப்புக்களைப் போன்று காணப்படுகின்றன (முதிர்ச்சியடையும் திகதி வரை வைப்பாளரினால் வைத்திருக்கப்படல் வேண்டும்). பாரிய கைமாற்றத்தக்க

வைப்புச் சான்றிதழ்கள் பொதுவாக ஐ.அ.டொலர் 1 மில்லியன் அல்லது அதற்கும் கூடுதலான நாணய இனங்களின் வழங்கப்படுவதுடன் கொண்டு வருபவர் மாற்றலாம் என்ற வசதி வைப்புச் சான்றிதழ்கள் விற்பனை செய்யப்படுவதனை இயலுமைப்படுத்துகிறது. சாத்தியமான இடர்நேர்வுகளாகக் கொடுகடன், திரவத்தன்மை தீர்ப்பனவு மற்றும் சந்தைப்படியான விலை என்பன காணப்படுகின்றன.

வைப்புச் சான்றிதழ் தவணை வைப்புக்களுடன் ஒப்பிடுகையில் திரவத்தன்மை கொண்ட சாதனங்களாகக் காணப்படுவதுடன் இது ஒதுக்கு முதலீட்டாளர்கள் வைப்புச் சான்றிதழ்களை விற்பதற்கும் எதிர்பாராத காரணங்களின் காரணமாக ஏற்படக்கூடிய எதிர்பாராத பொறுப்புக்களை நிதியிடுவதற்கான திரவத்தன்மையினைப் பெறுவதற்குமான நெகிழ்ச்சித்தன்மையினை வழங்குகிறது.

**(ஈ) மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்**

மீள்கொள்வனவு உடன்படிக்கை பொருளாதார ரீதியாக பிணையிடப்பட்ட கடனை ஒத்ததாகக் காணப்படுகின்ற போதும், தொழில்நுட்ப ரீதியாக பிணையங்களின் விற்பனை மற்றும் எதிர்காலக் கொள்வனவு ஆகிய இரண்டுடனும் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது.

காசினை கடன்படுவதும் பிணையங்களை விநியோகிப்பதும் (காசு உள்ளே/ பிணையங்கள் வெளியே) 'மீள்கொள்வனவு' கொடுக்கல்வாங்கல் எனப் பரிசீலனையில் கொள்ளப்படுகிறது மற்றைய பிரிவு (காசு வெளியே/ பிணையங்கள் உள்ளே) 'நேர்மாற்று மீள்கொள்வனவு' எனக் கருதப்படுகிறது. திறைசேரி மற்றும் முகவர்களுக்கான மிகப் பொதுவான காலம் ஓரிரவாகும் என்பதுடன் வர்த்தகப்படுத்துகின்ற மிகப் பொதுவான காலம் இரண்டு வாரங்கள் அல்லது அதற்குக் குறைவான காலமாகும்.

குறிப்பீடு செய்யப்பட்ட வீதம் என்பது மீள்கொள்வனவூடான கடன்பட்ட காசின் செலவு என்பதாகும் (ஆரம்பத்தில் செலுத்தப்பட்ட விலைகளுக்கும் வர்த்தகத்தின் இறுதியில் மீள்கொள்வனவிற்காக செலுத்தப்பட்ட விலைகளுக்குமிடையிலான வேறுபாடாகும்) காசுக் கடன் வழங்குவோருக்கும் 'உச்ச வரையறை'யொன்று தேவைப்படுகிறது. இதனுடன் பிணையமாகப் பயன்படுத்தப்படுகின்ற பிணையங்களின் சந்தைப் பெறுமதி கடன்பட்ட நிதியத்தின் தொகையிலும் பார்க்கப் பெரிதாகும். இவ்வுச்ச எல்லை அல்லது இடர்நேர்விற்கான எல்லை பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் 1 சதவீதத்திலிருந்து 5 சதவீதம் வரை வேறுபடும். இது, பிணையமாக வைத்திருக்கப்படக்கூடிய பிணையத்தின் தரத்தினைப் பொறுத்ததாகும்.

**பிணையுறுதி விபரங்கள்**

மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் பொதுவான அல்லது விசேட பிணையுறுதி என இரண்டு வகையான பிணையுறுதிகள் பயன்படுத்தப்படுகின்றன. இப்பிணையுறுதி வகைகள் மற்றும் அவற்றின் பண்புகள் வருமாறு:

**அட்டவணை 1 - பிணையுறுதி வகைகள் மற்றும் அவற்றின் பண்புகள்**


| பொதுவான பிணையுறுதிகள் | குறிப்பிட்ட வழங்கல் அல்லது விசேடமானவை |
|---|---|
| குறிப்பிட்ட பிணையுறுதி வகைக்குள், ஒப்பீட்டு ரீதியில் பரந்தளவு பிரமாணங்களைப் பூர்த்தி செய்கின்ற ஏதேனும் பிணையங்களை வழங்கல் | வழங்குநரின் அடையாளப்படுத்தலின் மூலம் குறித்துரைக்கப்பட்ட குறிப்பிட்ட பிணையங்களின் வழங்கல் |
| திறைசேரி பிணையங்கள் போன்ற பிணையங்கள், முகவர் படுகடன் மற்றும் முகவர் ஈட்டினால் ஆதரவளிக்கப்பட்ட பிணையங்கள் | பொதுவான பிணைய வீதத்திற்கும் மிகக் கீழேயுள்ள வீதத்தில் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்ற குறித்துரைக்கப்பட்ட வழங்கல் (பொதுவான பிணைய வீதத்திலும் பார்க்கக் குறைந்த வீதத்தில் கடன்பட முடியும்) |
| பிணையங்களின் சொத்துப்பட்டியல்களுக்காக நிதிகளைப் பெறுவதே பிரதான எண்ணமாகும் | பிரதான எண்ணம் யாதெனில், நிதியிடுவதிலும் பார்க்கக் குறிப்பிட்ட பிணையங்களைப் பெற்றுக்கொள்வதேயாகும் |

**நேர்மாற்று மீள்கொள்வனவு கடன்வழங்கல்**

இது, மற்றைய வங்கிகள் தமது மிகையான காசினை, நிதிப் பற்றாக்குறையாகவுள்ள வங்கியொன்றில் களஞ்சியப்படுத்துவதற்கு ஊக்குவிப்பதுடன் இதன் மூலம் வங்கிகள் அவற்றின் மிகையான நிதியியல் மீது கூடுதலான வருவாயினையும் ஈட்டிக் கொள்ளமுடிகிறது. இது, ஆரம்ப விற்பனையாளருக்கு உயர்ந்த வீதத்தில் குறிப்பிட்டதொரு பிணையத்தினை அல்லது காசு ஒதுக்கினை விற்பனை செய்வதன் காரணமாக உழைக்கப்பட்ட இலாப முறைமையில் இலாபமீட்டும் ஒரு வழியாகும்.

இந்நேர்மாற்று மீள்கொள்வனவினைத் தற்காலிகமான மிகையான திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவதற்குப் பயன்படுத்துவதற்கு முடிகின்ற அதேவேளையில், இது சந்தை இடர்நேர்விற்கான மேலதிக வருமானத்துடன் கடன் வழங்குவதற்காக முக்கிய பிணையங்களைக் கொண்ட பிணையுறுதிகளைப் பெற்றுக் கொள்வதுடன் தொடர்புபட்டிருப்பதனால் பாதுகாப்பான வழியில் இலாபமும் ஈட்டப்படுகிறது.

வரைபடம் 2: மீள்கொள்வனவு பாய்ச்சல் கூற்று




**மீள்கொள்வனவு - கடன்பாடுகள்**

மீள்கொள்வனவு உடன்படிக்கையென்பது சொத்துப் பட்டியலுக்குத் திரவத்தன்மையினை வழங்குவதற்கான பதிலீட்டு முறையொன்றாகும். இம்முறையானது, எதிர்பாராத காசுத் தேவைப்பாடுகளுக்கு முகம்கொடுப்பதற்காக திரவச் சொத்துக்களை ஒடுக்குவதனைத் தடுக்கிறது. இதனைக் காத்திரமான காசு முகாமைத்துவ நடைமுறையொன்றாகவும் பயன்படுத்திக் கொள்ள முடியும். பிணையுறுதி தொடர்பானதாக இது இருப்பதனால் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த செலவில் கடன்படுவதற்கு இதனைப் பயன்படுத்த முடியும் என்பதுடன் விளைவு வளையின் அசைவு காரணமாக ஒன்றுசேர வேண்டிய நன்மைகளைப் பேணுகின்ற விதத்தில், சந்தையிலுள்ள நிலையான வருமானம் தரும் பிணையங்களை விற்பனை செய்வதனைத் தவிர்த்து, இடர்ப்பாடான காலப்பகுதியில் நிலையான வருமானம் தரும் பிணையங்களை விற்காமல் எதிர்பாராத திரவத்தன்மை தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யப் பயன்படுத்த முடியும்.

**(உ) நிதியிடல் சாதனமொன்றாக வெளிநாட்டு செலாவணி பரஸ்பர பரிமாற்றல்**

வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கை என்பது ஒரு ஒப்பந்தமாகும். இதில் சமகாலத்தில் ஒரு தரப்பினர் இன்னொரு தரப்பினரிடமிருந்து ஒரு நாணயத்தினை கடன்பட்டு அதனை இரண்டாந்தரப்பினருக்கு கடன் வழங்குவதாகும். ஒவ்வொரு தரப்பும் அதன் இணைத்தரப்பினருக்கு பிணையுறுதியாக மீள்கொடுப்பனவு கடப்பாடுகளை பயன்படுத்திக் கொள்வதுடன் மீள்கொடுப்பனவுத் தொகை ஒப்பந்தத்தின் ஆரம்பித்திலுள்ளவாறு வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய வீதத்தில் நிர்ணயிக்கப்படுகிறது. இதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றலை வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வற்ற பிணையுறுதி மயப்படுத்தப்பட்ட கடன்பாடாக/ கடன்வழங்கலாக பார்க்க முடிகிறது.

வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்கள், ஏற்றுமதியாளர்கள் இறக்குமதியாளர்கள் அதேபோன்று தமது வியாபார நிலைமைகளைப் பாதுகாத்துக் கொள்ள விரும்பும் நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் உட்பட, நிதியியல் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் வாடிக்கையாளர் இருவருக்குமான வெளிநாட்டு நாணயங்களைத் திரட்டுவதற்கான கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவை வேறுபட்ட ஆரம்ப முதிர்ச்சிகளைக் கொண்ட இரு நிலைமைகளின் எதிரீடுகளை இணைக்கின்றமையின் மூலம் ஊக வர்த்தகங்களுக்காக அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்கள் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதியில் கூடியளவிற்குத் திரவத்தன்மை கொண்டனவாகக் காணப்படுகின்றனவெனினும், நீண்ட கால முதிர்ச்சிகளைக் கொண்ட கொடுக்கல்வாங்கல்கள் அண்மைய ஆண்டுகளில் அதிகரித்திருக்கின்றன.

வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் உங்கள் நிதியிடலை ஒரு நாணயத்திலிருந்து மற்றொரு நாணயத்திற்கு பரிமாற்றிக் கொள்வதனை அனுமதிக்கிறது.

நாணயம் A இலிருந்து நாணயம் B இற்கு பரிமாற்றிக் கொள்வதன் நோக்கம் ஒன்றில் நாணயம் A இற்கான முதலீட்டு வருமானத்தினை உயர்த்திக் கொள்வதாக (நீங்கள் A இல் முதலீடு செய்தவராக இருப்பின்) அல்லது/ நாணயம் B இல் உள்ள உங்கள் கடன்பாட்டுச் செலவினைக் குறைத்துக் கொள்வதாக (நீங்கள் B இல் உள்ள கடன்பாட்டாளராக இருக்குமிடத்து) இருக்கும்.

முதலீட்டு நோக்கிலிருந்து பார்க்கையில், ஒருவர் வருமானத்தினை உயர்த்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும் ஏனெனில்:

ஒன்றில், பரஸ்பர பரிமாற்றத்திலிருந்து மேலதிக வருமானத்தினை நீங்கள் பெற்றுக்கொள்ளுதல், உதாரணமாக காலாண்டு முடிவில் யூரோ தொடர்பில் ஐ.அ.டொலரை வைத்திருப்பதற்கு வங்கிகள் முன்னுரிமையளிக்கின்றன. எனவே, உங்களிடமுள்ள ஐ.அ.டொலரைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வங்கிகள் யூரோ நிதியிடலை மலிவாக விற்பனை செய்கின்றன அல்லது வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்து மேலதிக வருமானத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும். உதாரணமாக மற்றொரு நாணயத்தில் கூடுதலான முதலீட்டுத் தேர்வுகளை நீங்கள் கொண்டிருக்கலாம்.

உதாரணமாக, ஐரோப்பிய பிராந்தியத்திலுள்ள நாடொன்றின் (நாடு X) ஐ.அ.டொலர் காசுப் பாய்ச்சல்கள் பரஸ்பர பரிமாற்றலுடன் யூரோவிற்குப் பாதுகாப்பு ஆதரவினை வழங்குகின்றன. நாடு X ஐ.அ.டொலர் உயர்வடையுமா அல்லது தேய்வடையுமா என்பது தொடர்பில் ஊகமெதனையும் கொண்டிருக்கவில்லை. இது அதன் நிதியிடலை ஐ.அ.டொலரிலிருந்து யூரோவிற்கு மாற்றியிருக்கிறது் அவ்வளவுதான். வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் என்பது உங்கள் நிதியிடல்/ முதலீடுகள் பிரச்சனைகளை ஒரு நாணயத்திலிருந்து மற்றொரு நாணயத்திற்கு மாற்றிக் கொள்வதற்கு உதவுமொரு சாதனமாக விளங்குவதன் காரணமாக பரஸ்பர பரிமாற்றலின் விலையிடல் இரு நாணயங்களுக்கான சந்தையின் முன்னுரிமையினைப் பிரதிபலிப்பதாகக் காணப்படுகிறது.

வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றலை, ஒன்றில் நிதியிடலுக்காக அல்லது முதலீட்டு நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முடியும்.

இது நிதியிடலுக்கானதாக இருப்பின், யூரோவுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் நிதியிடல் செலவானதாக இருப்பின், வணிகர்கள் நாடு X இலிருந்து ஐ.அ.டொலரை கடன்பட்டு நாடு X இற்கு யூரோவினை கடன் வழங்குவதற்கு அதிகளவிற்கு ஊக்குவிக்கப்படுவார்கள்.

இது முதலீட்டிற்கானதாக இருப்பின், யூரோவுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் விளைவு அதிகரிக்குமாயின், வணிகர்கள் நாடு X இலிருந்து ஐ.அ.டொலர்களை கடன்பட்டு நாடு X இற்கு யூரோவில் கடன் வழங்குவதற்கு அதிகளவிற்கு ஊக்குவிக்கப்படுவார்கள்.

வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் உபாயத்தில், ஒதுக்கு முகாமையாளர், அவர்களது ஒதுக்குச் சொத்துப்பட்டியலில் ஒன்றில் செலவினம் அல்லது உயர் விளைவினையுடைய நாணயத்தினைக் கொண்டிருப்பாராயின் அவர்களது சொத்துப்பட்டியல் வைத்திருக்கப்படும் நாணயத்தில் ஒப்பீட்டு ரீதியில் அநுகூலம் மிக்க நாணயங்களிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் பொறுப்பினைத் தீர்ப்பனவு செய்வதற்காக மற்றொன்றினைப் பரிமாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

**(ஊ) பாதுகாப்பான முன்னோக்கிய பரஸ்பர பரிமாற்றல்கள்**

இது பரஸ்பர பரிமாற்றலின் விரிவாக்கப்பட்டதொரு பதிப்பாகும். இதில் விளைவு அதிகரிப்பு உபாயமானது ஏதேனும் வணிக விலை வேற்றுமை வலையமைப்பினால் அடையாளம் காணப்படுவதன் மூலம் தூண்டப்படுகிறது. வணிக விலை வேற்றுமை வாய்ப்பு உடன் மற்றும் முன்னோக்கிய செலாவணி வீதங்களினால் வட்டி வீதங்களினாலும் பகுப்பாய்வு செய்யப்படுவதுடன் வெளிநாட்டு நாணய இடர்நேர்வுகளுக்கெதிராகப் பாதுகாக்கவும் படுகிறது.

இவ்வுபாயம் மற்றொரு நாணயத்துடன் ஒப்பிடுகையில் ஒரு நாணயத்தின் அருந்தல் தன்மை தொடர்பாகக் காணப்படக்கூடிய நாணயச் சோடியிலுள்ள வணிக விலை வேற்றுமை வாணிப உபாயத்தினைக் கண்டறிவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இதைப் போன்றதொரு சூழ்நிலையில் செலவுமிக்க நாணயத்தின் மூலம் கடன் வழங்கி மற்றொரு நாணயத்தினால் பரஸ்பர பரிமாற்றல் செய்வதன் மூலம் சொத்துப்பட்டியல் முகாமையாளர் தவணை வைப்புக்கள் போன்ற இடர்நேர்வுமிக்க நாணயச் சந்தை உற்பத்திகளிலிருந்து அவர்கள் ஈட்டிக் கொள்ளக்கூடிய பொதுவான வருவாயிலும் பார்க்க மேலதிக வருமானத்தினை ஈட்டிக் கொள்ளக்கூடியதாக இருப்பார். இவ்வுபாயத்தினை ஒரு வாரத்திலிருந்து ஒரு சில மாதங்கள் வரையிலான காலப்பகுதியில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

உதாரணமொன்றின் மூலம் இதனை விளக்குவதாக இருப்பின்

பின்வருமாறு அனுமானித்துக் கொள்வோம்:
அவுஸ்திரேலிய டொலர்/ ஐ.அ.டொலர் உடன் வீதம் 1.0411
முன்னோக்கிய புள்ளி: -22.89
அவுஸ்திரேலிய டொலர் வைப்பு வீதம்: 3.00%
திகதிகள்: 30 சனவரி - 28 பெப்புருவரி, 2020 (29 நாட்கள்)
தொகை: 80 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் (~83 மில்லியன் ஐ.அ.டொலர்)

நடைமுறைகள்:

- தகைமையுடைய இணைத்தரப்பினரொருவரிடமிருந்து 1 மாத உடன் மாற்றத்திற்காக அவுஸ்திரேலிய வைப்பு விலைக்குறிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வது: 3.00 சதவீதம் (3.00 சதவீதத்தில் உடன் 1 மாத அவுஸ்திரேலிய டொலரை எங்கு நீங்கள் வைப்புச் செய்தீர்களோ அங்கு வர்த்தகத்தின் வைப்புப் பிரிவு).
- அவுஸ்திரேலிய டொலர்/ ஐக்கிய அமெரிக்க டொலர் உடன் 1 மாத முன்னோக்கிய புள்ளிகள்: -22.89 புள்ளிகள் அவுஸ்திரேலிய/ ஐ.அ.டொலர் உடன் வீதம்: 1.0411 (ஐ.அ.டொலருக்கெதிராக அவுஸ்திரேலிய டொலரை நீங்கள் எங்கு வாங்குகின்றீர்களோ, விற்கின்றீர்களோ அங்குள்ள வர்த்தகத்தின் நாணயப் பரஸ்பர பரிமாற்றல் பகுதி).
- ஐ.அ.டொலர் உள்ளடக்கச் சுருக்கி விளைவினைக் கணித்தல் மற்றும் ஐ.அ.டொலர் வைப்பு வீதத்துடன் நேரடியாக ஒப்பிட்டு, இது சிறந்த வணிக விலை வேற்றுமை வணிகமா என்பதனைத் தீர்மானித்தல்.

மிக இலகுபடுத்தப்பட்ட வழியில், நாம் செலவுமிக்க நாணயத்தினை உடன் அடிப்படையில் விற்பனை செய்வதற்கும் அதே நாணயத்தினை இணைக்கப்பட்ட வீதத்தில் முன்னோக்கி வாங்குவதற்கும் ஆரம்பிப்போம். வாங்கப்பட்ட நாணயம் முன்னோக்கிய திகதி வரை வைப்பிலிடப்பட்டிருக்கும். முன்னோக்கிய திகதியில் ஆரம்ப நாணயம் மீண்டும் எடுக்கப்படுகிறது. செலவுமிக்க நாணயத்தின் நியதிகளில், முழு செய்முறைகளிலிருந்தும் உருவாக்கப்பட்ட வருவாய், வைப்பு வீதத்திலும் பார்க்க உயர்வாக இருக்குமாயின், அது வணிக விலை வேற்றுமை வாணிபமாக இருக்கும். குறிப்பிட்ட சந்தையில் ஒரு நாணயத்திற்குக் காணப்படும் அருந்தல் தன்மை காரணமாக இவ்விலை வேற்றுமை வாணிபம் நிலைபெறும்.

### எ) தங்க தேர்வுகள்

தங்கம் மிகச் சிறந்த பாதுகாப்பான சொத்தொன்றாகவும் சந்தைத் தளம்பல் காணப்படும் நேரங்களில் பணவீக்கத்திலிருந்து பாதுகாப்பதாகவும் கருதப்படுகிறது. வழமையாக, தங்க விலைகளில் காணப்படும் உயர்ந்த தளம்பல் உயர்ந்த அளவுகளுடன் சேர்ந்து தேர்வுச் சந்தைகளைச் செயற்படுத்துகின்றது. ஏதேனும் மத்திய வங்கி தங்க உடமையினை வைத்திருக்குமாயின், தொழில்நுட்பப் பகுப்பாய்வின் அடிப்படையில், தாக்குப்பிடிக்கக்கூடிய பிரதான விலையில் முன்கூட்டியே தீர்மானிக்கப்படக்கூடிய விற்பனையாளர்களினால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் மிகையான வருமானத்தினை ஈட்டுவதற்காக சந்தையில் கருமபீடத்தில் வழமையாக ஐரோப்பிய தங்கம் வாங்கும் தெரிவுரிமைக்கு வழமையாக விற்பனை செய்யமுடியும்.

வாங்கும் தெரிவுரிமையின் விற்பனையாளர் இணங்கப்பட்டவாறு குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ குறித்துரைக்கப்பட்ட விலையில் (விற்பனை விலை) குறிப்பிட்ட தங்கத்தின் குறிப்பிட்ட அளவினை விற்பனை செய்வதற்கான கடப்பாடொன்றினைக் கொண்டுள்ளார். ஐரோப்பிய தேர்வொன்று மேற்கொள்ளப்படுவது முதிர்ச்சித் திகதியில் மாத்திரமே இடம்பெறுகிறது. தேர்விற்குரிய விற்பனையாளர் எப்பொழுதும் வாங்குநரின் கோரிக்கையினை கௌரவிப்பதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ள வேளையில் வாங்கும் தேர்வாளர் தேர்வினை மேற்கொள்வதற்கான அல்லது அவ்வாறு செய்யாமல் விடுவதற்கான நெகிழ்ச்சியினைக் கொண்டிருப்பார். இந்நெகிழ்ச்சித்தன்மைக்காக, வாங்கும் தேர்வாளர் கட்டணம் என அழைக்கப்படும் விலையொன்றினைச் செலுத்துவார். இவ்வுபாயத்தின் கீழ் வாங்குநரினால் தேர்வு மேற்கொள்ளப்படுகின்ற விடயத்தினைப் பொறுத்தவரை, இலாபம் பெறப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக விற்பனையாளரினால் தேர்வுகள் தீர்மானிக்கப்படுகையில் ஐரோப்பிய வாங்கும் தேர்வின் விற்பனையாளர் என்ற முறையில் மத்திய வங்கி ஆரம்பத்தில் கட்டண வருமானமொன்றினைப் பெற்றுக்கொள்ளும். விற்பனை விலை எப்பொழுதும் நிறையேற்றப்பட்ட சராசரி விலையிலும் பார்க்க உயர்வாக இருக்கும் விதத்திலேயே தீர்மானிக்கப்படுகிறது. விற்பனையாளர் குறிப்பிட்ட சொத்தினை அவரின் பாதுகாப்பின் கீழ் வைத்திருப்பதனால் இவ்வுபாயம் பாதுகாக்கப்பட்ட வாங்கும் உபாயமென அழைக்கப்படுகிறது. விற்பனையாளர், சந்தை தொடர்பான விலை நடத்தையினை மிகக் கவனமாகப் பகுப்பாய்வு செய்ததன் பின்னர் தேர்வின் விற்பனை விலையினைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

மேலும், தேர்வுக் காலப்பகுதியில், சந்தை விலைகள் விற்பனை விலையிலும் பார்க்க மேலே நகர்கின்ற நிலையொன்று காணப்படுகின்ற மற்றும் கால முடிவில் விற்பனையாளரினால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு கீழே நகர்கின்ற சூழ்நிலையில் விற்பனையாளர் விரும்பத்தக்க ஒரே விலையில் தங்கத்தினை விற்பதற்கான வாய்ப்பினை மீண்டும் இழந்துவிடுகிறார். எனினும், இவ்வுபாயத்தின் முக்கிய குறிக்கோள் வாங்குநரினால் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விரும்பத்தக்க விலையில் மேற்கொள்ளப்படுகின்ற சாத்தியமான தேர்வுடன் ஆரம்ப வருமானத்தினை ஈட்டிக் கொள்வதாக இருப்பதனால் அவை அச்சாதனத்துடன் இயல்பாகவே பின்னிப் பிணைந்துள்ள பண்புகளாகக் காணப்படுகின்றன.

மாறாக, தங்கத்தினை வைத்திருக்கின்ற மத்திய வங்கிகள் தங்கம் தொடர்பில் வாங்கும் தெரிவுரிமையினைக் கொண்டிருக்கின்றவிடத்து விற்பனை (புரியப்படுகின்ற) விலை சராசரி நிறையேற்றப்பட்ட விலையிலும் பார்க்க உயர்வாக இருக்க வேண்டிய முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விலை மட்டத்திற்குச் சமமானதாக

**அட்டவணை 2: தங்கத் தேர்வின் இடர்நேர்வும் வருவாயும்**

| பிரமாணம் | இடர்நேர்வு | வருமானம் |
|---|---|---|
| **கால முடிவில் உடன் வீதம் < விற்பனையாளரின் விற்பனை வீதம்** | - | ஆரம்பத்தில் கட்டண வருமானம். நிலையான வைப்பினைப் போலன்றி கட்டணம் ஆரம்பத்தில் ஈட்டப்படும். |
| **கால முடிவில் உடன் வீதம் > விற்பனையாளரின் விற்பனை வீதம்** | சந்தை வீதம், தங்கத்தினை விற்பதற்கான விற்பனையாளரினால் நிர்ணயிக்கப்பட்ட விலையினை விஞ்சிக் காணப்பட்ட போதும் தங்கத்தினை நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பதற்கு விற்பனையாளர் கடப்பாடு கொண்டிருப்பதனால் தேர்வின் காரணமாக அங்கு அமையச் செலவு காணப்படும் | தேர்வின் கொடுப்பனவு விற்பனையாளரினால் நிர்ணயிக்கப்பட்ட விலையின் மீது உச்சப்படுத்தப்படுகிறது |
| **இக்காலப்பகுதியில் தளம்பல் காணப்படுமாயின்** | தேர்வுக் காலப்பகுதியில் சந்தை விலை, விற்பனையாளரினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்கக் கூடுதலாக உயர்வடையுமிடத்து காலம் முடிவடைகையில் விற்பனையாளரினால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்குக் கீழே நகரும் போது இடர்நேர்வு காணப்படும். ஒதுக்கு முகாமையாளர் தங்கத்தினைச் சராசரி நிறையேற்றப்பட்ட செலவிற்கும் மேலதிக விற்பனை செய்வதற்கான வாய்ப்பினை இழந்துவிடுகிறார். | |

இருத்தல் வேண்டும். தேர்வுகள் மேற்கொள்ளப்படுமாயின் விற்பனையாளர் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட மட்டத்தில் தங்கத்தினை விற்பனை செய்யமுடியும். விற்பனையாளர் மிக ஆரம்பத்தில் இக்கொடுக்கல்வாங்கல்களிலிருந்து முக்கிய வருமானமொன்றினை ஈட்டிக் கொள்வார். அவ்வாறு இடம்பெறவில்லையாயின் விற்பனையாளர் முக்கிய வருமானத்தினை இன்னமும் ஈட்டிக் கொள்கின்ற வேளையில் தங்க உடமைகள் அவை தற்போதுள்ளவாறே தொடர்ந்தும் காணப்படும்.

ஒதுக்கு முகாமைத்துவத்திற்காக திரவத்தன்மையினை உயர்த்துவதற்கு தங்கத்தினைப் பயன்படுத்துவது தங்கத்தினை உடமையில் கொண்டுள்ள மத்திய வங்கிகளுக்கு மிக ஏற்றதாகும். ஏனெனில், சந்தை விலை அசைவுகளிலிருந்து பெறப்படுகின்ற விலை நன்மைகளைத் தவிர, வெளிநாட்டு ஒதுக்குச் சொத்துப்பட்டியலில் சொத்து வகையொன்றாக இருக்கும் தங்க உடமையிலிருந்து வேறு எந்த நன்மையும் கிடைக்கமாட்டாது. மேலே இரண்டாவது சூழ்நிலையில் ஆராயப்பட்டவாறு தங்கத்தினை விற்பதற்குப் பதிலாக, தங்கத்தினை விற்பதற்காக மத்திய வங்கி வாங்கும் தெரிவுரிமையினைப் பயன்படுத்தக் கூடியதாகவுள்ள வேளையில் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளுக்காக ஈட்டப்பட்ட கட்டணத்தினைப் பயன்படுத்தத்தக்கதாகவுள்ளவிடத்து வாங்கும் தெரிவுரிமைக்காக விலையிடுகின்ற நேரத்தில் தங்கத்திலிருந்து மேலதிக வருமானத்தினை ஈட்டிக் கொள்ள முடியும்.

உதாரணம்: மத்திய வங்கி 3 மாதங்களுக்காக 1,600 கொண்ட விற்பனையாளர் நிர்ணய விற்பனை விலையில் 30,000 அவுன்ஸ் கொண்ட எண்ண நிலைத் தொகைக்காக, தங்கப் பத்திர உடமைகள் மீதான (நிறையேற்றப்பட்ட சராசரி செலவு = ஐ.அ.டொலர் 1,580 எனக் கொள்க) வாங்கும் தெரிவுரிமையொன்றினை விற்கிறது. கட்டண வருமானம் ஐ.அ.டொலர் 40,000 (புளூம்பேர்க் எடுத்துக்காட்டுகின்ற கட்டணம்) ஆகும். இது, வாங்கும் தெரிவுரிமையினை விற்பதன் மூலம் முன்கூட்டியே ஈட்டிக் கொள்ளக்கூடிய வருமானமாக இருப்பதுடன் இதனை, சொத்தொன்றினை விற்பனை செய்யாமல் திரவத்தன்மை தேவைப்பாடுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

**தங்கத் தேர்வுகளைப் பயன்படுத்துவதிலுள்ள அநுகூலங்கள்**

- விற்பனையாளர் தற்போதுள்ள அவரின் தங்க உடமைகளுக்காக வாங்கும் தெரிவுரிமையை எழுதுவதன் மூலம் மேலதிக வருமானத்தினை ஈட்டிக் கொள்ளமுடியும்.
- வாங்கும் தெரிவுரிமையை விற்பது இழப்புக்களை ஏற்படுத்தாது (மேலேயுள்ள கொடுத்துத்தீர்த்தல் வரைபடத்தில் காட்டப்பட்டவாறு). ஏனெனில், பாதுகாக்கப்பட்ட வாங்கும் தெரிவுரிமை பாதுகாப்பான சாதனமாகக் காணப்படுகிறது.
- முன்மொழிவு, விற்பனை தெரிவுரிமைகள் மீதே கவனம் செலுத்துவதனால் விற்பனையாளர் தேர்வுகள் மீது கொடுகடன் இடர்நேர்வைக் கொண்டிருக்கமாட்டார்.

4. முடிவுரை

இன்று வெளிநாட்டு ஒதுக்குகளில் கணிசமான தொகை மத்திய வங்கிகளினால் வைத்திருக்கப்படுவதனைப் பரிசீலனையில் கொள்ளும் போது, ஒதுக்கு முகாமையாளர்கள் கட்டாயப் பொறுப்புக்களைப் பூர்த்தி செய்ய வேண்டிய தமது ஆற்றலை விட்டுக்கொடுக்காமல் தமது சொத்துத் தளத்தினை உச்சப்படுத்துவது அவர்களுக்குச் சவால்மிக்கதாக இருக்கிறது.

ஆகவே, சொத்துப்பட்டியல் முகாமையாளர்கள் பொறுப்புக்களைப் பூர்த்திசெய்கின்ற வேளையில் திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவதற்கு குறித்துரைக்கப்பட்ட முதலீட்டுச் சாதனங்களைத் தெரிவுசெய்வதில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது அவசியமாகவுள்ளது. ஏனெனில் உயர் திரவத்தன்மைக்கான விலைகள் வருமானங்களை ஓரளவிற்கு விட்டுக்கொடுப்பதன் மூலமே பெறப்படுகிறது.

திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவதற்கான பொருத்தமான முதலீட்டுச் சாதனங்களைத் தெரிவுசெய்வது, முகாமைப்படுத்தப்பட்டு வருகின்ற வெளிநாட்டு ஒதுக்குச் சொத்துப்பட்டியலில் ஏற்படுகின்ற இடர்நேர்வின் தன்மையில் தங்கியிருக்கிறது. இது, பொருத்தமான முதலீட்டுச் சாதனம் தொடர்பில் தீர்மானிக்கையில் முக்கியமானதொரு காரணியாகக் காணப்படுகின்றது.

இக்கட்டுரையானது, வருமானத்தினை உயர்த்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய ஒதுக்கு முகாமைத்துவத்தின் திரவத்தன்மை முகாமைத்துவ உபாயங்கள் பற்றி ஆராய்கின்ற அதேவேளையில் பொறுப்புக்களை உபாய திகதியில் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கிலிருந்து செலுத்த வேண்டியுமிருக்கிறது. இவ்வுபாயங்கள், மற்றைய சொத்து வகுப்புக்களுக்கு ஏற்படக்கூடிய குறைந்தபட்ச இடையூறுகளுடன் திரவத்தன்மை தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான வெளிநாட்டு நாணய ஒதுக்கு முகாமைத்துவத்தில் பயன்மிக்கனவாகக் காணப்படுகின்றன.

**உசாத்துணை**


Bergljot B. Barkbu and Li Lian Ong, “The basic mechanics of FX swaps and cross-currency basis swaps”, https://www.bis.org/publ/qtrpdf/r_qt0803z.htm,2010

Dewei Zhang et al; 2013, Liquidity management of foreign exchange reserves in continuous time, Shanghai Lixin University of Commerce, Shanghai 201620, China, Elsevier

International Meonary Fund “Guidelines for Foreign Exchange Reserve Management”

https://www.imf.org/external/np/mae/ferm/eng/#:~:text=is%20it%20Important%3F-,1.,for%20a%20country%20or%20union.&text=assist%20the%20government%20in%20meeting,and%20external%20debt%20obligations%3B%20and,

Monthly Statement of the Public Debt

https://www.treasurydirect.gov/govt/resources/faq/faq_publicdebt.htm, accessed on 01.03.2021

US Treasury bill holding, https://www.treasurydirect.gov/govt/reports/pd/mspd/mspd.htm, US department of Treasuries, accessed on 01.03.2021

# நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையில் வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் வகிபாகம்

முனைவர் இலங்காபதி ஸ்ரீதரன்
பிரதிப் பணிப்பாளர்
பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம்

## 1. அறிமுகம்

ஒரு நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து செல்ல வேண்டுமாயின் அந்நாட்டின் நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினைப் பேணுவது அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது. இதனாலேயே உலகிலுள்ள அநேக மத்திய வங்கிகள் தமது பிரதான குறிக்கோள்களாக விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணுதல், நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பேணுதல் ஆகிய இரண்டினையும் இணைத்து கொண்டுள்ளன. நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினைப் பேணுதல் என்பது பல்வேறுபட்ட காரணிகளில் தங்கியுள்ளது. அவற்றுள் வைப்பாளர்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் என்பது முதன்மைக் காரணியாகக் காணப்படுகின்றது. பொதுமக்கள் நிதி நிறுவனங்களில் வைப்பிலிட்ட தமது வைப்புக்கள் பாதுகாப்பானதாகக் காணப்படுகின்றது என உணரும் பட்சத்தில் அவர்கள் நிதியியல் முறைமையின் மீது நம்பகத்தன்மை கொண்டவர்களாகக் காணப்படுவதுடன் அது நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினைப் பேண உதவும் காரணியாகக் காணப்படுகின்றது. வங்கி மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மீதான வினைத்திறனான மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்கள் முக்கியமானதாகக் காணப்படும் அதேவேளை நிதி நிறுவனம் ஒன்று முறிவடையும் சந்தர்ப்பத்தில் வைப்பாளர்களின் வைப்புக்களுக்கு நட்டஈட்டினைப் பெற்றுக் கொடுக்கும் வைப்புக் காப்புறுதித் திட்டமானது பொதுமக்கள் நிதி நிறுவனங்களில் வைத்துள்ள நம்பிக்கையினை மேலும் உயர்த்தி அதன் மூலம் நாட்டின் நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினைப் பேண உதவும். ஆயினும் நிதியியல் நிறுவனங்கள் தார்மீகப் பொறுப்பற்ற விதத்தில் தமது வியாபாரத்தினைச் செயற்படுத்த இட்டுச்செல்லும் என்பது வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் ஒரு பாதக அம்சமாகக் காணப்படுவதுடன் அது நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையற்ற நிலைமைக்கு இட்டுச்செல்லும் என்பது கரிசனை கொள்ளும் ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. இந்நிலையில் இக்கட்டுரை இலங்கையில் நடைமுறையிலுள்ள வைப்புக் காப்புறுதித் திட்டம் பற்றியும் நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினைப் பேணுதலில் அதன் வகிபாகம் தொடர்பிலும் முக்கிய கவனம் செலுத்தி ஆராய்கின்றது.

## 2. இலங்கையின் நிதியியல் முறைமையும் ஒழுங்குமுறைப்படுத்துனர்களும்

பொதுவாக நிதியியல் முறைமை ஒன்றில் நிதியியல் நிறுவனங்கள், நிதியியல் சந்தைகள், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தும் உட்கட்டமைப்பு வசதிகள், நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் என்கின்ற நான்கு தரப்பினர் காணப்படுவர். இலங்கையில் நிதியியல் நிறுவனங்களாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள், கூட்டுறவுக் கிராமிய வங்கிகள், முதன்மை வணிகர்கள், காப்புறுதி நிறுவனங்கள், பங்குத்தரகு நிறுவனங்கள் மற்றும் ஓய்வுகால நிதியங்கள் போன்றன காணப்படுகின்றன. அதேநேரம் பங்குச் சந்தை, அரச பிணையங்கள் சந்தை, கூட்டாண்மைப் படுகடன் சந்தை, பணச் சந்தை மற்றும் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை போன்ற நிதிச் சந்தைகளும் காணப்படுகின்றன. இவை எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்யும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு மற்றும் கூட்டுறவு ஆணையாளர் திணைக்களம் ஆகிய நான்கு ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் காணப்படுகின்றனர். அதைவிட இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் கீழ் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான அமைப்புக்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றது. இவற்றுக்கப்பால் சிறிய வைப்பாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு வைப்புக் காப்புறுதித் திட்டமொன்று நடைமுறையிலுள்ளது. நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்யும் ஒழுங்குமுறைப்படுத்துனர்களின் செயற்பாடுகளுக்கு

மேலதிகமாக நிதி நிறுவனமொன்று முறிவடைகின்ற சந்தர்ப்பத்தில் வைப்பாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் இது ஈடுபடுகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களும் எந்த இடையூறும் இன்றி சுமூகமாக செயற்படுகின்ற நிலைமையினை நிதியியல் முறைமையின் உறுதித்தன்மை எனலாம்.

3. **வைப்புக் காப்புறுதித் திட்டம் என்றால் என்ன?**

நிதி நிறுவனங்களில் வைப்புக்களை செய்துள்ள சிறிய அளவிலான வைப்பாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு நாடுகளால் வழங்கப்படும் ஒரு நிதி ரீதியான பாதுகாப்பினை வைப்புக் காப்புறுதித் திட்டம் எனலாம். பொதுவாக வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புக்களை ஏற்கும் நிறுவனம் ஒன்று முறிவடைகின்ற சந்தர்ப்பத்தில் அந்நிறுவனத்தில் வைப்புச் செய்துள்ள வைப்பாளர்களது மூலதனம் மற்றும் வட்டித் தொகையின் முழுவதனையுமோ அல்லது பகுதியினையோ மீளச்செலுத்துகின்ற நடைமுறையே வைப்புக் காப்புறுதித் திட்டம் என்று அழைக்கப்படுகின்றது.

4. **இலங்கையின் வைப்புக் காப்புறுதித் திட்டம்**

2008/09 காலப்பகுதியில் நிலவிய உலக நிதியியல் நெருக்கடியினைத் தொடர்ந்து நிதியியல் முறைமையின் உறுதித் தன்மையினைப் பேணும் பொருட்டு வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை பல்வேறு நாடுகளும் உருவாக்கின. இலங்கை மத்திய வங்கி 1950ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரகாரம் 01 ஒத்தோபர் 2010 இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட வைப்புக் காப்புறுதித் திட்டமானது நிதி நிறுவனங்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையினை உயர்த்துவதுடன், நிதியியல் கல்வியறிவு குறைவாகக் காணப்படுகின்ற சிறிய முதலீட்டாளர்களின் நலன்கள் பேணப்படுவதன் மூலம் சிறிய அளவிலான வைப்பாளர்களின் சேமிப்பு மட்டம் அதிகரிக்க வழிவகுக்கும் அதேவேளை, இத்திட்டமானது அனுமதியளிக்கப்படாத வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களின் நடவடிக்கைகளைக் குறைவடைந்து செல்லச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவற்றுக்கப்பால் ஒரு நிதியியல் நிறுவனம் முறிவடைகின்ற போது அரசாங்கத்துக்கு அல்லது வரி செலுத்துனர்களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு சுமைகளும் இவ்வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் குறைக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. 22 நவம்பர் 2013 இருந்து நடைமுறைக்கு வரும்வகையில் வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் பெயர் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவளிப்புத் திட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இவ்வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களில் தமது பணத்தினை வைப்புச் செய்த வைப்பாளர்கள் அந்நிறுவனம் ஏதேனும் காரணங்களால் முறிவடைகின்ற சந்தர்ப்பங்களில் நட்ட ஈட்டினைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆரம்பத்தில் இந்நட்ட ஈட்டுத் தொகையின் உச்ச வரம்பு ரூ.200,000 ஆகக் காணப்பட்ட போதிலும் அப்பெறுமதி படிப்படியாக உயர்த்தப்பட்டு தற்போது ஒரு நிதி நிறுவனம் முறிவடையும் போது அதன் வைப்பாளர் ஒருவர் ரூ.1.1 மில்லியன் வரை நட்ட ஈடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் முக்கிய பண்புகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

1. இத்திட்டத்தின் அங்கத்தவர்களாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் காணப்படுகின்றன. ஆகவே இத்தகைய நிறுவனங்களில் வைப்புச் செய்தவர்கள் வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் நட்ட ஈட்டினைப் பெற்றுக் கொள்வர்.

2. மேற்குறிப்பிடப்பட்ட அங்கத்துவ நிறுவனங்களில் வைப்புச் செய்த கேள்வி, நிலையான மற்றும் சேமிப்பு வைப்புக்கள் இத்திட்டத்தினுள் உள்ளடங்கும். ஆயினும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், உள்ளூராட்சி சபைகள் போன்ற இலங்கை அரசின் வைப்புக்கள், அங்கத்துவ நிறுவனங்களுக்கிடையிலான வைப்புக்கள், நிதி நிறுவனத்துடன் தொடர்புடைய தரப்பினரது வைப்புக்கள் மற்றும் கைவிடப்பட்ட சொத்துக்களாக கருதப்பட்ட வைப்புக்கள் என்பன இத்திட்டத்திற்குள் உள்ளடங்காது.

3. அங்கத்துவ நிறுவனங்கள் குறிப்பிட்ட நியதிகளுக்கேற்ப காப்புறுதிக் கட்டணமாக தகுதிவாய்ந்த மொத்த வைப்புத் தொகையில் 0.10 சதவீதம் தொடக்கம் 0.15 சதவீதம் வரை நிதியத்துக்கு செலுத்த வேண்டும்.

4. இவ்வாறு சேகரிக்கப்பட்ட காப்புறுதித் திட்டத்தின் நிதிகள் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்ட ஏனைய பிணையங்களில் வைப்புச் செய்ய முடியும். இதைவிட அங்கத்துவ நிறுவனங்களில் ஏற்படும் திரவத்தன்மை நெருக்கடிகளைச் சமாளிக்கும் பொருட்டு பிணையளிக்கப்பட்ட கடன்களை இந்நிதியத்திலிருந்து வழங்க முடியும்.

5. அங்கத்துவ நிறுவனமொன்றின் அனுமதிப்பத்திரம் நிறுத்திவைக்கப்படும்/ இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே நட்டஈடு வழங்கப்படும் என்பதோடு அனுமதிப்பத்திரம் நிறுத்திவைக்கப்பட்ட/ இரத்துச் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாத காலத்துக்குள் நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.

6. நட்டஈடுத் தொகை கணிப்பிடுகையில் குறித்ததொரு நிறுவனத்தில் “ஒரு வைப்பாளருக்குரிய” வைப்புக்கள் என்ற அடிப்படையில் கணிக்கப்படும். உதாரணமாக

"அ" என்ற வைப்பாளர் நிதி நிறுவனமொன்றில் ஒரு சேமிப்பு கணக்கு மற்றும் மூன்று வெவ்வேறு நிலையான வைப்புக்களைக் கொண்டிருப்பாராயின் அவருடைய நான்கு கணக்கு மீதிகளையும் ஒன்றுதிரட்டி அதனடிப்படையில் உச்ச வரம்பான ரூ.1.1 மில்லியனுடன் ஒப்பிட்டு நட்டஈட்டுத் தொகை கணிப்பிடப்படும்.

### 5. வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் முக்கியத்துவம்

இலங்கையில் வைப்புக் காப்புறுதித் திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துவது பின்வரும் காரணங்களுக்காக முக்கியத்துவம் உடையதொன்றாகக் காணப்படுகின்றது.

1) இலங்கையில் வங்கிகள் முறிவடைதல் மிக அரிதாகக் காணப்படுகின்ற ஒன்றாயினும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் முறிவடைகின்ற பல்வேறு சந்தர்ப்பங்கள் காணக்கிடைக்கின்றன. இவ்வாறான நிதிக் கம்பனிகளின் தோல்விகள் நிதியியல் முறைமை பற்றிய மக்களின் நம்பிக்கையினை சீர்குலைப்பனவாக அமைகின்றன. எனவே வைப்புக் காப்புறுதித் திட்டமொன்று நிதியியல் முறைமை மீதான பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரிக்க அவசியமாகின்றது. இது பொருளாதார மற்றும் நிதியியல் முறைமையின் உறுதித் தன்மையினை உயர்த்த உதவுகின்றது.

2) வைப்புக் காப்புறுதித் திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிதி நிறுவனங்கள் முறிவடைந்தாலும் வைப்புக்களை இழக்க நேரிடாது என்கின்ற நம்பிக்கையினை வைப்பாளர்களுக்கு வழங்குகின்றது. இதனால் வைப்பாளர்கள் ஒரு நிதி நிறுவனம் தொடர்பான ஏதேனும் பாதகமான செய்திகள் காரணமாக தமது வைப்புக்களை அந் நிறுவனத்திலிருந்து விரைந்து மீள்எடுக்க முனைய மாட்டார்கள். அதே நேரம் இது நிதியியல் முறைமையில் ஏற்படக்கூடிய தொடர்புடைய நிறுவனங்களின் தொடர்ச்சியான தோல்விகளையும் தவிர்க்க உதவும்.

3) வைப்பாளர்கள் தமது சேமிப்புக்களை நிதி நிறுவனமொன்றில் வைப்புச் செய்கின்ற போது அதன் நிதி நிலைமைகள் பற்றி கண்காணித்தல் அவசியம். ஆயினும் நிதியியல் கல்வியறிவு ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்ற சிறிய வைப்பாளர்களிடையே இதனை எதிர்பார்க்க முடியாது. ஒரு வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது இவ்வாறு நிதி நிறுவனங்களை வைப்பாளர்கள் தொடர்ச்சியாக கண்காணிக்க வேண்டும் என்கின்ற தேவையை குறைவடையச் செய்கிறது.

4) ஒரு நிதியியல் முறைமையில் ஒழுங்குபடுத்துனர்கள் நிதிநிறுவனங்களினை எத்தகைய வினைத்திறனுடன் ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்தாலும் கூட சில நிறுவனங்கள் தோல்வியடைவது தவிர்க்க முடியாததொன்றாகும். ஆகவே வைப்புக் காப்புறுதித் திட்டமானது ஒரு நிதியியல் முறைமையில் ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பவற்றுக்கு மேலான ஒரு பாதுகாப்பு வளையத்தினை வழங்குகின்றது.

5) நிதி நிறுவனம் ஒன்று முறிவடைகின்ற போது அது தொடர்பிலான பல்வேறு நிதிச்சுமைகளை அரசாங்கமும் வரிசெலுத்துனர்களும் ஏற்க வேண்டிய நிலைமை ஏற்படுவதுண்டு. வைப்புக் காப்புறுதித் திட்டமொன்று காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவ்வாறான நிதிச் சுமைகள் காப்புறுதித் திட்டத்தினால் பொறுப்பேற்கப்படுவதனால் அரசாங்கத்தினதும் வரி இறுப்பாளர்களினதும் சுமை குறைக்கப்படும்.

### 6. வைப்புக் காப்புறுதித் திட்டத்தில் காணப்படுகின்ற பொதுவான பிரச்சனைகள்

வைப்புக் காப்புறுதித் திட்டமானது அங்கத்துவ நிதி நிறுவனங்களிடமிருந்து கட்டணம் ஒன்றினை அறவிடுகின்றது. ஆயினும் இக்கட்டணத்தின் அளவானது அந்நிதி நிறுவனம் எதிர்நோக்குகின்ற இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுவதில்லை என்பது ஓர் குறைபாடாகும். இலங்கையைப் பொறுத்த வரையில் மூலதனப் போதுமாந்தன்மை வீதம் 14 சதவீதத்தை விடக் குறைவாகக் காணப்படுகின்ற வங்கிகள் 0.125 சதவீத கட்டணத்தையும் அனுமதியளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகள் 0.15 சதவீத கட்டணத்தையும் செலுத்த வேண்டும். ஆயினும் நிதிக் கம்பனிகள் உயர்ந்தளவான இடர்நேர்வினைக் கொண்டிருப்பதோடு முறிவடைவதற்கான சாத்தியத்தன்மையினை ஒப்பீட்டளவில் உயர்வாகவும் கொண்டுள்ள போதும் அவர்களுக்கான காப்புறுதிக் கட்டணம் அதற்கேற்றவாறு நிர்ணயிக்கப்படவில்லை எனக் கருதப்படுகின்றது. ஆகவே காப்புறுதிக்கான கட்டணம் முறையாக தீர்மானிக்கப்படவில்லை என்பது இதன் ஒரு பொதுவான பிரச்சனையாகும்.

வைப்புக் காப்புறுதித் திட்டத்துக்கென அதன் அங்கத்துவ நிறுவனங்களால் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை 0.10 சதவீதத்துக்கும் 0.15 சதவீதத்துக்கும் இடையிலான ஒரு நிலையான தொகையாகக் காணப்படுகின்றது. ஆனாலும் ஆரம்ப காலத்தில் நட்டஈட்டின் உச்ச வரம்பானது ரூ.200,000 ஆகக் காணப்பட்டு படிப்படியாக உயர்ந்து தற்போது ரூ.1.1 மில்லியனாகக் காணப்படுகின்ற போதும் காப்புறுதிக் கட்டணத் தொகை ஒரே மட்டத்திலேயே காணப்படுகின்றன. அத்துடன் பொருளாதார மற்றும் நிதியியல் நெருக்கடியான காலங்களில் நிதியியல் நிறுவனங்கள் முறிவடையும் எண்ணிக்கையும் ஒப்பீட்டளவில் அதிகரித்து காணப்படும் ஆயினும் இம்மாற்றங்களுக்கேற்ப காப்புறுதிக் கட்டணம் மாற்றியமைக்கப்படாமையால் வைப்புக் காப்புறுதித் திட்ட நிதியத்தின் போதுமான தன்மை கேள்விக்குரியதாகின்றது.

வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நட்டஈட்டின் அதியுச்ச வரம்புத் தொகையின் நியாயமான அளவு என்பது தீர்மானிக்க முடியாததாக உள்ளது. ஒவ்வொரு நாடுகளும் வைப்புக் காப்புறுதி நட்டஈட்டுக்கான வெவ்வேறு உச்ச வரம்பினைக் கொண்டுள்ளன. அந்தவகையில் இலங்கையின் உச்ச வரம்பாக ரூ.1.1 மில்லியன் காணப்படுகின்றது. இது சிறியளவிலான வைப்பாளர்களுக்கு போதுமானதொரு தொகையா அல்லது மிகையானதொரு தொகையா என்பது விவாதத்துக்குரியதொரு விடயமாக காணப்படுவதுடன் இது தொடர்பில் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொறிமுறை ஒன்று இதுவரை உருவாக்கப்பட்டவில்லை என்பதுவும் கரிசனைக்குரிய ஓரு விடயமாகும்.

வைப்புக் காப்புறுதித் திட்டமானது குறித்த ஓர் அமைப்பிடம் மாத்திரம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய நிறுவனங்கள் இவ்வாறான திட்டங்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படுவதில்லை. இது ஒரு வகையான தனியுரிமையை உருவாக்குவதனால் வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் வினைத்திறனான தன்மை ஒப்பிடமுடியாததாக உள்ளதுடன் காப்புறுதிக் கட்டணத்தின் பொருத்தமான தன்மையும் அளவிடமுடியாததாக உள்ளது.

நிதி நிறுவனம் ஒன்று முறிவடைகின்ற போது எவ்வளவு விரைவாக வைப்பாளர்களுக்கு நட்டஈட்டினை வழங்கக்கூடிய ஆற்றலினைக் கொண்டுள்ளது என்பதுவும் கரிசனை கொள்ள வேண்டியதொரு விடயமாகக் காணப்படுகின்றது. வைப்பாளர்களுக்குரிய நட்டஈட்டினை வழங்க அதிக காலம் எடுக்குமாயின் அது குறித்த வைப்பாளர்களுக்கு சந்தர்ப்பக் கிரயத்தினை உருவாக்கும். ஆயினும் இது தொடர்பில் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் எதுவும் இல்லை என்பதுவும் காப்புறுதித் திட்டத்தின் பொதுவான குறைபாடாகக் குறிப்பிட முடியும்.

### 7. முடிவுரை

ஒரு நாட்டினுடைய நிதியியல் முறைமையின் உறுதித்தன்மை பேணப்பட வேண்டுமாயின் நிதி நிறுவனங்கள் மீதான ஒழுங்குபடுத்தல்கள், மேற்பார்வைகள், சட்டக் கட்டமைப்புக்கள், அறிக்கையிடுதல்கள், வெளிப்படுத்தல்கள், இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புக்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட கூட்டாண்மைத் தத்துவங்கள் என அனைத்து அம்சங்களும் சரியான அளவிலும் முறையிலும் கட்டமைக்கப்பட வேண்டும். வைப்புக் காப்புறுதித் திட்டமும் இத்தகைய விடயங்களுடன் சேர்ந்து நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினை வலுபடுத்தும் இன்னுமொரு அம்சமாகத் திகழ்கின்றது. முறைமைசார் இடர்நேர்வுகளை இனங்கண்டு தவிர்க்கும் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு, நிறுவனம்சார் இடர்நேர்வுகளை மேற்பார்வை செய்யும் நுண்பாக ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் சந்தைசார் ஒழுங்குபடுத்தல் செய்முறைகள் என்பனவும் ஒருங்கிணைந்து ஒரு நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினைப் பேண அமைப்பியல் சார்ந்து உதவுகின்றன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக பொதுமக்களின் நிதியியல் கல்வியறிவு மட்டம் ஒரு நாட்டின் நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினைப் பேண உதவும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காரணியாகக் காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் வைப்புக் காப்புறுதித் திட்டமானது நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினை பேணும் மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைச் செயற்பாட்டிற்கொரு மேலதிக ஆதரவினை வழங்கும் ஒன்றாகக் காணப்படுகின்றது எனலாம். ஆயினும் விரைவாக மாற்றமடைந்து வருகின்ற தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கேற்ப வைப்புக் காப்புறுதித் திட்டம் தனது எல்லைகளை விரிவாக்கிக் கொள்ளுதல் அவசியமானதாகும்.

### உசாத்துணை நூல்கள்


Anginer D, Demirguc-Kunt A, 2018, Banks Runs and Moral Harzard, Policy Research Working Paper World Bank Grohp, September 2018.

Carstens A, 2018, Deposit Insurance and Financial Stability: Old and New Challenges, 17th IADI Annual General Meeting and Annual Conference, October 2018

Jayamaha R, 2003, Deposit Insurance Scheme for Sri Lanka, 15th Convocation Article, Association Professional Bankers, 2003.

# இலங்கையின் தென்பகுதியின் பொருளாதாரத்தினைக் கட்டமைத்த கறுவா வியாபாரம்

எம். எஸ். ஹந்துன்கே
பிரதிப் பணிப்பாளர்
தொடர்பூட்டல் திணைக்களம்

எஸ். குணரத்ன
மூத்த முகாமையாளர்
பிரதேச அலுவலகம் - மாத்தறை

**கறுவாத் தொழில் துறையின் வரலாறு:**

**கறுவாவின் சொந்த நாட்டினைக் கண்டறிதல்**

இக்கட்டுரையானது, இலங்கையில் கறுவாத் தொழிலின் வரலாற்றினையும் நாட்டின் தென்பகுதிப் பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கத்தினையும் ஆராய்வதற்கு எதிர்பார்ப்பதுடன் குறிப்பாக, அதன் உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் இன்று கறுவா பயிர்ச்செய்கையாளர்களினால் எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் என்பன பற்றியும் மிகுந்த கவனத்தினைச் செலுத்துகிறது.

இலங்கையின் கறுவாத் தொழில் துறை பண்டைய புவிசார் அரசியல் யுத்தங்களுடன் வரலாற்று ரீதியாக இறுகப் பிணைக்கப்பட்டிருப்பதுடன் இவ்வாசனைப்பொருள் வர்த்தக வியாபாரத்தினூடாக ஒரு நாட்டினை மற்றொரு நாட்டினை விட வல்லாதிக்கம் கொண்டதாக உதாரண வழிமுறைகளுடன் வலுப்படுத்துகின்ற வழிமுறையாக பயிர்செய்யப்பட்டது. கறுவா வர்த்தகம் அதிகாரப்போட்டி மற்றும் ஒழுக்கவிழுமியங்களற்றதொரு முறையில் கட்டியெழுப்பப்பட்டிருந்ததுடன் தொழிலாளர் நடைமுறைகளையும் நடைமுறைப்படுத்தியிருந்தது.

இலங்கையில் போர்த்துக்கீசர், டச்சுக்காரர் மற்றும் ஆங்கிலேயர் ஆகிய அனைத்துப் படையெடுப்பாளர்களும் காலணித்துவ நாடுகளிலும் உலகளாவிய வர்த்தகத்திலும் தமது ஆதிக்கத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு கருவியாக கறுவாப் பயிர்ச்செய்கையினைப் பயன்படுத்திக் கொண்டனர். அவர்களது கொள்கைகளும் அவர்களது நடவடிக்கை முறைகளும் நாட்டின் கறுவா தொழில் துறையின் மீது நீண்ட காலத் தாக்கத்தினை விட்டுச் சென்றிருப்பதுடன் அது பற்றி கீழே விபரமாக ஆராயப்படுகிறது.

பண்டைக் காலத்தில் கறுவா வர்த்தகம் 15ஆம் நூற்றாண்டு வரை வெனிசு நகர வர்த்தகர்களினால் அலெக்சாந்திராவிலிருந்து ஐரோப்பா வரை மேற்கொள்ளப்பட்டு வந்தது. தொல்லைகள் நிறைந்த நாடுகளூடாக அராபிய வர்த்தகர்களினால் அலெக்ஸ்சாந்திரா வரை மிக இரகசியமான முறையில் கொண்டு வரப்பட்ட கறுவாவினை வெனிசு நகர வணிகர்கள் வாங்கி செலவுமிக்க ஐரோப்பிய சந்தைகளுக்கு விற்பனை செய்ததுடன் கறுவாவிற்கான கேள்வி இவ்வைரோப்பிய சந்தைகளில் மிக விரைவாக அதிகரித்தது. இதன் காரணமாக, ஐரோப்பிய சந்தைகளில் கறுவாவிற்கான அதிகரித்த கேள்வியை அராபிய வர்த்தகர்களினால் பூர்த்தி செய்யமுடியவில்லை. அதேநேரம், அராபியர்களினால் பேணப்பட்ட சுதந்திர வர்த்தகக் கொள்கை ஆசியாவிலுள்ள துருக்கியினால் இடையூறுகளுக்குள்ளாகியமையினதும் எகிப்திய மம்லுக்குகள் அதிகாரத்திற்கு வந்தமையினதும் விளைவாக, பல ஐரோப்பிய நாடுகளிடையே வாசனைத்திரவியங்களின் வர்த்தகத்தினை தமது கைகளில் எடுத்துக்கொள்ளும் பொருட்டு கறுவா உள்ளிட்ட வாசனை உற்பத்திகளுக்கான கடல் வழிப்பாதையினைக் கண்டறிவதற்கான ஆர்வம் காணப்பட்டது.

ஆகவே, பல நாடுகள் வாசனைத்திரவியங்களை உற்பத்தி செய்யக்கூடிய புதிய நாடுகளைக் கண்டறிவதில் முயற்சிகளை மேற்கொண்டன. இக்கண்டுபிடிப்பு முயற்சிகளின் பெறுபேறாக வாஸ்கொடகாமாவினால் இந்தியாவும் கிறிஸ்தோபர் கொலம்பஸ்சினால் அமெரிக்காவும் கண்டுபிடிக்கப்பட்டன.

### போர்த்துக்கீசரின் வருகை

இலங்கையின் கறுவா பல நூற்றாண்டுகளாக நிலைபெற்று வருகிறது. போர்த்துக்கீசர் வருவதற்கு முன்னரும் கூட, இலங்கை மன்னர்களின் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட உற்பத்தியும் விற்பனையும் காணப்பட்டன. எனினும், கறுவா வர்த்தக ரீதியாகப் பயிர் செய்யப்படவில்லை. சலகம மக்கள் கறுவாப்பட்டை உரிப்பதில் ஈடுபட்டிருந்தனர். அவர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட கறுவா மன்னருக்கு வழங்கப்பட்டன. போர்த்துக்கீசர் இலங்கைக்கு வந்த போது கோட்டை இராசதானியின் மன்னனாக தர்ம பராக்கிரமபாகு இருந்தான். மன்னன் போர்த்துக்கீசருக்கு ஆண்டுதோறும் 400 பகரகளை (1 பகர = 176.25 கி.கிறாம்) வழங்குவதற்கு இணங்கினான். இதற்குப் பதிலாக போர்த்துக்கீசர் சிங்கள இராசதானிக்கு கரையோரப் பாதுகாப்பினை வழங்க இணங்கினர். இலங்கையின் கரையோர மாகாணங்களைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்ததன் பின்னர் அவர்கள் கறுவாவின் உற்பத்தியை அதிகரிக்க விரும்பினர். இந்நோக்கத்திற்காக புதிய உயர் அறுவடையைத் தரும் முறைகள் அவர்களினால் கண்டுபிடிக்கப்பட்டமையின் மூலம் பாரம்பரிய உற்பத்தி முறை மாற்றமடைந்தது. 1518 வரை கறுவாவின் தனியுரிமை முஸ்லீம்களிடமும் அரசிடமும் காணப்பட்டது. எனினும், இத்தனியுரிமை 1518இல் கொழும்பில் போர்த்துக்கீசர் துறைமுகம் நிருமாணிக்கப்பட்டதுடன் தகர்ந்து போயிற்று. இது, போர்த்துக்கீசர் அவர்களது கறுவா வர்த்தக தனியுரிமையினைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்களினால் அடிக்கடி இழைக்கப்பட்ட காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கை, கறுவா வர்த்தகத்தினூடாகப் பெருமளவு இலாபங்களை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கியது.

### டச்சுக்காரரின் வருகை

17ஆம் நூற்றாண்டில் ஆசியாவிற்கு டச்சுக்காரர் வருகைதந்ததுடன் போர்த்துக்கீசரின் கறுவா வர்த்தக தனியுரிமை தகரத் தொடங்கியது. டச்சுக்காரர், போர்த்துக்கீசரைத் தோற்கடிப்பதற்கு சிங்கள மன்னர்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்டனர். இதன் விளைவாக, போர்த்துக்கீசர் 1658இல் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டதுடன் டச்சுக்காரர் கறுவா உற்பத்தி மற்றும் வர்த்தகத்தினை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். இச்சம்பவமானது மிகப் பிரபல்யமாகக் குறிப்பிடப்படுகின்ற “இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போல” என்ற கொண்டாட்டத்திற்கு வழிவகுத்தது. கறுவா உற்பத்தியை அதிகரிப்பதற்காக டச்சுக்காரரும் வன்முறையில் ஈடுபட்டனர். ஆண்டுதோறும் அவர்கள் ஏறத்தாழ 270 தொன் கறுவாவினை ஏற்றுமதி செய்தபோதும் சந்தைக் கேள்வியில் ஏற்பட்ட வருடாந்த அதிகரிப்பின் காரணமாக, காடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட கறுவா மாத்திரம் போதுமானதாக இருக்கவில்லை. இப்பிரச்சனைகளுக்கு ஒல்லாந்தர் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் ஊழியரான த குக்கினால் தீர்வொன்று சமர்ப்பிக்கப்பட்டது. இது, 1602 இலிருந்து 1798 வரை தொழிற்பாட்டிலிருந்தது. அவரின் கருத்துப்படி, கறுவா கன்றுகள் பயிரிடப்பட்டு 8 ஆண்டுகளின் பின்னர் அறுவடை ஆரம்பிக்கப்படல் வேண்டும். இதற்கமைய, இலங்கையில் முதலாவது கறுவாத் தோட்டம் கொழும்பு, கறுவாத் தோட்டம், கதிரான மற்றும் அவரிவத்தை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டதன் மூலம் இலங்கையின் கறுவா பயிர்ச்செய்கை தொழிலுக்கான அத்திவாரமிடப்பட்டது. இக்கறுவாத் தோட்டங்கள் நிறுவப்பட்டதன் மூலம் உள்ளூர் கறுவா பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டமையின் காரணமாக ஐரோப்பிய சந்தைகள் கறுவா விலை வீழ்ச்சியினால் இடர்நேர்வுகளை எதிர்நோக்க வேண்டியிருந்தன. ஆகவே, டச்சுக்காரர் கறுவா உற்பத்தியில் தனியுரிமையினைக் கொண்டிருந்த போதும் விலைகளைப் பேணுவதற்காக அவர்களது மேலதிக கறுவா இருப்புக்களை எரித்ததுடன் வணிகக் கப்பல்கள் புறப்படுவதனையும் வேண்டுமென்றே தாமதித்தனர். டச்சுக்காரரின் ஆளுகை அமைப்பும் கறுவா உற்பத்தியின் இயலளவினை அதிகரிப்பதனைப் பேணும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இதன்படி, கப்டனின் கீழ் கறுவாவிற்காக தனியான திணைக்களமொன்று இருந்ததுடன் கப்டனின் கீழ் கறுவாப்பட்டை உரிப்பவர்களின் நான்கு விதானைகளும் விதானையொருவரின் கீழ் நான்கு தலையாளிகளும் இருந்தனர். கொஸ்கொட, வெலிதர, மாதம்பே, ரத்கம, தடல்ல, மாகொல்ல மற்றும் லொனுமோதர என்பன கப்டன் அல்லது கறுவாத் திணைக்களத்தின் மகாபத்தகேயின் கீழ் காணப்பட்ட கறுவா கிராமங்களாக இருந்தன.

சிறந்த தரமான கறுவா உற்பத்தியைப் பேணும் பொருட்டு டச்சு அரசாங்கம் கிராம மட்டம் வரை விரிவாக்கப்பட்ட கட்டுப்பாடான நிருவாக முறையினை பேணியமை தெளிவானதாகும். உடரட்டை இராசதானியின் மன்னன் கீர்த்தி சிறி ராஜசிங்கனுக்கும் டச்சு அரசாங்கத்திற்குமிடையில் 1766 பெப்புருவரி 14ஆம் திகதி கையெழுத்தான பிரபல்யம் மிக்க ஹங்குராங்கெத்த உடன்படிக்கையின்படி, இலங்கையில் கறுவாப் பயிர்ச்செய்கை மிகச் செழிப்புற்றுக் காணப்பட்டமை மிகத் தெளிவானதாகும்.

### ஆங்கிலேயரின் வருகை

1796இல் ஆங்கிலேயர்களினால் டச்சுக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டு கரையோரப் பகுதிகள் ஆங்கிலேயர்களினால் கையேற்கப்பட்டதுடன், டச்சுக்காரரின் கறுவாத் தனியுரிமை முழுமையாகத் தகர்ந்து போயிற்று, இரண்டாண்டுகளின் பின்னர் ஒல்லாந்தர் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி 1798இல் செயற்படாது போனதுடன் இழப்புக்களின்

காரணமாக 1800இல் முழுமையாக மூடப்பட்டுவிட்டது. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், பிரித்தானியர் 1,000 தொன் வரையிலான கறுவாவினை உற்பத்தி செய்யக்கூடியவர்களாக இருந்தனர். அத்துடன், ஐரோப்பிய சந்தை நடுத்தர காலப்பகுதியிலும் பார்க்கக் கூடுதலானளவிற்கு பரந்ததாகவும் கூடுதலானளவிற்கு சனநாயகத்தன்மை கொண்டதாகவும் காணப்பட்டதுடன் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் கறுவாவிற்குப் பெருமளவு விலை காணப்பட்டது. எனினும், கறுவா உற்பத்திகளின் விலைகள் உச்சமட்டத்தில் காணப்பட்ட காலப்பகுதியில் நுகர்வோர் கவனம் மலிவான விலையில் காணப்பட்ட காசியா போன்ற பதிலீடுகளின் பக்கம் திரும்பியிருந்தது. இதன் விளைவாக, புதிய நாடுகள் கறுவா உற்பத்தியில் நுழைந்தன. இதன்படி, 19ஆம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியிலிருந்து யாவா, சுமத்திரா, மொறிசியஸ் மற்றும் கயானா போன்ற நாடுகளில் கறுவாப் பயிர்ச்செய்கை ஆரம்பமாகியதுடன் கறுவா நிரம்பல் அதிகரித்தமையின் காரணமாக கறுவாவின் விலைகள் வீழ்ச்சியடைந்தன. இதன் விளைவாக, பிரித்தானியரின் கறுவா உற்பத்தியின் அரச தனியுரிமை கைவிடப்பட்டது. கோல்புறூக் - கமறூன் சீர்திருத்த முன்மொழிவுகளுக்கிணங்க, சில கறுவாத் தோட்டங்கள் தனியார் துறைக்கு விற்கப்பட்டன. 1835இல் ஒரு இறாத்தல் கறுவாவின் விலை 9 சிலிங் 9 பென்சுகளிலிருந்து 1848இல் 3 சிலிங் 6 பென்சுகளுக்குச் சரிவடைந்தது. மற்றைய கறுவா உற்பத்தி செய்யும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் சம்பளங்களும் தீர்வைகளும் குறைவாகவே காணப்பட்டன. அதேநேரம், தீர்வை இறாத்தலொன்றிற்கு 3 சிலிக்காகக் காணப்பட்டது. எனினும், கறுவா பயிர்ச்செய்கையாளர்களின் எதிர்ப்புக் காரணமாக 1841இல் தீர்வை 2 சிலிங்குகளுக்குக் குறைக்கப்பட்டது. எனினும், இம்முயற்சி வெற்றியளிக்காமையின் காரணமாக 1853இல் வரி முழுமையாக நீக்கப்பட்டது. 1840இல் பிரித்தானியர் உட்பட ஐரோப்பியர்களைப் பாதித்த பொருளாதார நெருக்கடி கறுவா தொழில் துறை மேலும் மோசமடையக் காரணமாயிற்று. கறுவா தொழில் துறையினால் இந்நிலைமையினை எதிர்கொள்ள முடியாமல் போயிற்று. 1830இல் 500,000 இறாத்தல் பெறுமதியான கறுவாவினை ஏற்றுமதி செய்தமையின் மூலம் 100,000 பவுண்கள் ஈட்டப்பட்ட போதும் 1890இல் இரண்டு மில்லியன் இறாத்தல் கறுவா செய்யப்பட்டதன் மூலம் 91,000 பவுண்கள் மட்டுமே ஈட்டப்பட்டது.

### இலங்கையின் கறுவா தனியுரிமையின் தகர்வு

மேற்குறிப்பிட்ட நிலைமையானது மிக நீண்ட காலமாக இலங்கையில் நிலவிய கறுவா தனியுரிமை தகர்வதற்குக் காரணமாகியது. இம்மோசமான நிலைமையானது கறுவாவினை மாத்திரமன்றி மற்றைய வாசனைப் பயிர்களையும் மோசமாகப் பாதித்ததுடன் கோப்பி, தேயிலை, கொக்கோ போன்ற புதிய பயிர்கள் கறுவா உள்ளிட்ட பாரம்பரிய வாசனைத்திரவியங்களின் பெறுமதிமிக்க இடங்களைப் பிடித்துக் கொண்டன. 1850ஆம் ஆண்டில் இலங்கையில் கறுவாப் பயிர்ச்செய்கை ஏறத்தாழ 50,000 ஏக்கர்களாகக் காணப்பட்டது. 1928இல் நாட்டில் மொத்த கறுவாப் பயிர்ச்செய்கை ஏறத்தாழ 25,000 ஏக்கர்களுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு கறுவாத் தோட்டங்கள், தெங்குப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டமையே காரணமாகும். அதில் ஏறத்தாழ 14,538 ஏக்கர்கள் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் ஏறத்தாழ 8,000 ஏக்கர்கள் நீர்கொழும்பு பிரதேசத்திலும் காணப்பட்டன. ஆகவே, தொடர்பான இவ்வாண்டுப்பகுதிகளில் நாட்டில் கறுவா பயிர்ச்செய்கைக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த நிலங்களில் தொடர்ச்சியான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. எனினும், தீவின் தென்பகுதி, இந்நாள்வரை கறுவா உற்பத்தியின் வலுவான கோட்டையாக விளங்கி வருகின்றது.

### இலங்கையின் தென் மாகாணத்தில் கறுவாத் தொழில்

### வேளாண்மைத் துறைக்கு தென் மாகாணத்தின் பங்களிப்பு

இலங்கையின் தேசிய வருமானத்திற்கு தென் மாகாணத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிக்கு முன்னர், வேளாண்மை மற்றும் சுற்றுலாத் துறை தென்பகுதி பொருளாதாரத்தின் கைத்தொழில் துறைக்கும் பொதுவாக நாட்டிற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியிருக்கிறது. அத்துடன், தற்பொழுது, கொக்கல சுதந்திர வர்த்தக வலயம் உலகளாவிய நோய்த்தொற்றுச் சூழ்நிலைக்கு மத்தியிலும் கூட தென் மாகாணத்தின் கைத்தொழில் துறைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியிருக்கிறது.

வேளாண்மைத் துறையில் அரிசி, தெங்கு மற்றும் கறுவா என்பன முக்கிய பயிர்களாகக் காணப்படுகின்றன. மேலும், மீன்பிடித்தொழில் துறையும் தென் மாகாணத்தின் பொருளாதாரத்திற்குப் பெருமளவு பங்களித்து வருகின்றது. இதற்குப் புறம்பாக, தென் மாகாணம் ஹிக்கடுவ, உணவட்டுன்ன, மிரிஸ்ஸ, தங்காலை, பெந்தோட்ட மற்றும் கொக்கல போன்ற உயர்ந்த கவர்ச்சி நிறைந்த கரையோரப் பகுதிகளையும் கொண்டிருக்கிறது. அத்துடன், றேந்தை வடிவமைக்கும் தொழில், சிற்பங்களைச் செதுக்கும் கலை, முகமூடிக்கான உருவங்களை உருவாக்குகின்ற கலைகள் போன்ற பாரம்பரிய தொழில்களும் தென் மாகாணத்திற்கு ஒளிவூட்டுவனவாகவுள்ளன. தென் மாகாணம் காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. காலி மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 1,652 சதுர கி.மீற்றராகக் காணப்படுகின்ற அதேவேளையில் மாத்தறை மாவட்டம் 1,283 சதுர கி.மீற்றரையும் அம்பாந்தோட்டை மாவட்டம் 2,609 சதுர கி.மீற்றரையும் உள்ளடக்கியிருக்கிறது. இதற்கமைவாக, தென் மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பு 5,544 சதுர கி.மீற்றர்களாகக் காணப்படுவதுடன் இலங்கையின் மொத்த நிலப்பிரப்பில் 8.4 சதவீதமாகவும் காணப்படுகிறது. கமத்தொழில் அமைச்சின் மூலங்களின்படி, இலங்கையிலுள்ள 46 வேளாண்மை வலயங்களில் 19 வேளாண்மை வலயங்கள் தென் மாகாணத்தில்

அமைவு பெற்றுள்ளன. பங்களிப்பு 41.3 சதவீதமாகும். இது, குறிப்பிடத்தக்கதொன்றாகும். தென் மாகாணத்திலுள்ள வேளாண்மை வலயங்களில் பெரும்பான்மையானவை மாத்தறை மாவட்டத்திலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அமைந்து முறையே 8 ஆகவும் 7 ஆகவும் காணப்படுகின்றன. நிலப் பயன்பாட்டு மாதிரியினைப் பரிசீலனையில் கொள்கையில் தென் மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பில் 75,472 எக்டேயர்கள் நெல் வயல்களாக விளங்கி 13.4 சதவீத நிலப்பரப்பினைக் கொண்டிருக்கின்ற வேளையில் தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் கறுவா முறையே 10.0 சதவீதம், 1.9 சதவீதம், 7.8 சதவீதம் மற்றும் 3.6 சதவீதப் பரப்புக்களைக் கொண்டிருக்கின்றன.

**தென் மாகாணத்தில் கறுவாப் பயிர்ச்செய்கையின் பரப்பளவு**

2019இன் எண்தொகை நியதிகளில் தென் மாகாணத்தில் கறுவா பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 25,060 எக்டேயர்களாகக் காணப்பட்டது. அதில், உற்பத்தித்திறன் மிக்க நிலப்பரப்பு 22,526 எக்டேயர்களாகவும் உற்பத்தி வளமற்ற நிலப்பரப்பு 2,534 எக்டேயர்களாகவும் காணப்படுகின்றன. கறுவா உற்பத்திக்கான உயர்ந்த பங்களிப்பு காலி மாவட்டத்திலிருந்து கிடைக்கிறது. இது 11,375 எக்டேயர்களாகும். இது தென் மாகாணத்தில் கறுவா பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 50.50 சதவீதமாகும். அடுத்து, மாத்தறை மாவட்டத்தில் 8,360 எக்டேயரில் கறுவா பயிர்செய்யப்பட்டதுடன் இது தென் மாகாணத்தில் கறுவா பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 37.11 சதவீதமாகும். அம்பாந்தோட்டை மாவட்டம் கறுவாப் பயிர்செய்கையில் தென் மாகாணத்திற்குக் குறைந்தளவு பங்களிப்பினை வழங்கியதுடன் இது 2,791 எக்டேயர்களைக் (12.39 சதவீதம்) கொண்டிருந்தது. காலி மாவட்டத்தின் பிரதேச செயலகங்களைப் பொறுத்தவரையில், கரந்தெனியா 3,933 எக்டேயர்களையும் பலப்பிட்டிய 1,513 எக்டேயர்களையும் அம்பலாங்கொடை 1,484 எக்டேயர்களையும் கொண்டிருந்ததுடன் இவை கறுவா பயிர்ச்செய்கைக்கு மிக உயர்ந்த பங்களிப்பினையும் வழங்கியுள்ளன. காலி மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட மொத்த கறுவா நிலப்பரப்பில் இவை முறையே 34.6 சதவீதம், 13.3 சதவீதம் மற்றும் 13.0 சதவீதங்களைக் கொண்டிருந்தன.



இதன்படி, காலி மாவட்டத்திலுள்ள மூன்று பிரதேச செயலகங்களினால் 61 சதவீதமான பங்களிப்பு வழங்கப்பட்டது. மாத்தறை மாவட்டத்திலிருந்தான பயிர்ச்செய்கைக்கான உயர்ந்த பங்களிப்புக்கள் முலத்தியானவின் 2,459 எக்டேயர்களிலிருந்தும் ஹக்மனவின் 791 எக்டேயர்களிலிருந்தும் கம்புறுப்பிட்டியவின் 787 எக்டேயர்களிலிருந்தும் பெறப்பட்டன. இவை, மாத்தறை மாவட்டத்தின் கறுவா விளைவிக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 48.3 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பிரதேச செயலகங்களில் வலஸ்முல்லவின் 1,409 எக்டேயர்களிலும் கட்டுவானவில் 886 எக்டேயர்களிலும் கறுவா பயிர்செய்யப்பட்டதுடன் இவை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கறுவா விளைவிக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 82.2 சதவீதத்திற்கு வகைகூறின. 2019இல் காலி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த கறுவா 6,621,092 கி.கிறாம்களாகக் காணப்பட்டதுடன் இதில் மிகப்பெரும் பங்களிப்பு 2,458,266 கி.கிறாம்களுக்கு வகைகூறிய கரந்தெனிய பிரதேச செயலகத்திலிருந்தும் 1,001,901 கி.கிறாம்களுக்கு வகைகூறிய அம்பலாங்கொட பிரதேச செயலகத்திலிருந்தும் 748,810 கி.கிறாம்களுக்கு வகைகூறிய பலப்பிட்டிய பிரதேச செயலகத்திலிருந்தும் கிடைத்தன. இவை காலி மாவட்டத்தின் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 63.6 சதவீதத்திற்கு வகைகூறின. 2019இல் மாத்தறை மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட மொத்த கறுவா 7,285,904 கி.கிறாம்களாகக் காணப்பட்டதுடன், இப்பாரிய பங்களிப்புக்களில் முலத்தியான பிரதேச செயலகத்திலிருந்து 1,823,025 கி.கிறாம்களும் அத்துறலிய பிரதேச செயலகத்திலிருந்து 1,531,875 கி.கிறாம்களும் கிடைத்தன. மாத்தறை மாவட்டத்தின் மொத்த அறுவடையில் 46.0 சதவீதத்திற்கு அவை பங்களித்தன. 2019இல் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மொத்த கறுவா அறுவடையில் 2,071,020 கி.கிறாம்களில் பெரும் பங்களிப்பு, 1,044,825 கி.கிறாம்களை உற்பத்தி செய்த வலாஸ்முல்ல பிரதேச செயலகத்திலிருந்தும் 656,700 கி.கிறாம்கள் கட்டுவான பிரதேச செயலகத்திலிருந்தும் கிடைத்தன. அவற்றின் பங்களிப்பு அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மொத்த அறுவடையில் 83.7 சதவீதம் கொண்ட உயர்ந்த மட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தன *(மூலம்: புள்ளிவிபரவியல் ஆய்வுக்கட்டுரை - 2019 முதன்மை செயலக அலுவலகம் - தென் மாகாணம்).*

**கறுவா பயிரின் முக்கியத்துவம்**

கறுவா மரக்கன்று என்றும் பசுமையான நீண்ட கால தாவரம் எனக் கருதப்படுகிறது. இது, இலங்கையின் சுதேசப் பயிராகும். இலங்கைக் கறுவா அல்லது உண்மையான கறுவா என்பது *சினமோனம் செலானிகத்தின்* உலர்ந்த பட்டையாகும். இது புன்னைமர தாவர குடும்பத்தினைச் சேர்ந்ததாகும். இலங்கையில் வர்த்தக ரீதியாகப் பயிரிடப்பட்ட கறுவா வகை *சினமன் வேறம்* என அழைக்கப்பட்டது. கறுவாவின் தனித்துவமாகக் காணப்படும் அதன் புதிய மணம் கறுவாவின் தரத்தினை நிர்ணயிக்கின்ற காரணியாகக் காணப்படுகின்றது. இதன் நிறம் வெளிறிய

மண்ணிறத்திலிருந்து பிரகாசமான சிவப்பு வரை வேறுபடுகிறது. இலங்கைக் கறுவாவின் உண்மையான சுவை உலக கறுவாச் சந்தையில் இலங்கைக்கு ஆதரவாக அமைந்தது.

கறுவா எண்ணெய் முக்கியமான கறுவாத் தயாரிப்புக்களிலொன்றாகக் காணப்படுவதுடன் இது கறுவாப்பட்டை, தடிகள், பட்டைத் துண்டுகள் மற்றும் கறுவா இலைகள், கறுவா வேர் போன்றவற்றிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. விசேடமாக இலங்கையில், கறுவா வீட்டுச் சமையலுக்கு வாசனைத்திரவியமாகப் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன், கறுவா கேக் வகைகளையும் இனிப்பு வகைகளையும் தயாரிப்பதற்கு இனிப்பு சுவையூட்டியாகவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும், கறுவா எண்ணெய் பல்வலிக்கான நிவாரணமளிக்கும் பாரம்பரிய மருந்தாகவும் காணப்படுகிறது. கறுவா மிக ஆரோக்கியமான கிருமிநீக்கியாகக் காணப்படுவதுடன் கறுவா பவுடர் ஆரோக்கியமான குடிபானமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்படி, உலக சந்தைகளில் கறுவாத் தேநீர் மிகப் பிரபல்யம் பெற்றதொன்றாகக் காணப்படுகின்றது. இன்று கறுவா இலங்கையரிடையேயும் பிரபல்யம் பெற்ற குடிபானமாக விளங்குகிறது. கறுவாவின் தரத்தின் அடிப்படையில் பல்வேறு வகையான நோய்களுக்கான மருந்து மாத்திரையாகவும் பயன்படுகின்றது. குறிப்பாக, இது கொழுப்புச் சத்தினைக் குறைக்கின்றது என நம்பப்படுகிறது. கறுவா அதன் மகிழ்வூட்டும் நறுமணம் காரணமாக நறுமணப்பொருட்களின் தயாரிப்பிற்கு விசேடமாகப் பயன்படுத்தப்படுகிறது. எனினும், உலக சந்தைகளில் காசியா கறுவாவின் விற்பனை 85 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற வேளையில் உண்மையான கறுவாவின் விற்பனை 15 சதவீதத்திற்கு மாத்திரமே வகைகூறுகிறது. உலக சந்தையில் மொத்த உண்மையான கறுவா நிரம்பலில் 90 சதவீதத்திற்கு இலங்கை பங்களிக்கிறது.

### இலங்கையில் கறுவாவின் ஆண்டு உற்பத்தி, ஏற்றுமதி அளவு மற்றும் பெறுமதிகள்

கறுவாவின் ஏற்றுமதி அளவு மற்றும் பெறுமதி தொடர்பான மாவட்ட அடிப்படையிலான தரவுகள் போதுமானதாக இல்லாமை பலயீனமானதொன்றாகும். பின்வரும் அட்டவணை இலங்கையில் ஆண்டு உற்பத்தி, ஏற்றுமதி அளவு மற்றும் பெறுமதி என்பனவற்றினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 1: வருடாந்த கறுவா உற்பத்தி, ஏற்றுமதி அளவு மற்றும் பெறுமதிகள்**

| ஆண்டு | உற்பத்தி (மெ. தொன்) | ஏற்றுமதி அளவு (மெ. தொன்) | பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | (ரூ.மில்.) | (ஐ.அ.டொ. மில்.) |
| 2014 | 17,600 | 13,949 | 18,255 | 132.28 |
| 2015 | 17,707 | 13,828 | 19,099 | 131.18 |
| 2016 | 18,945 | 14,946 | 24,973 | 159.07 |
| 2017 | 22,341 | 16,967 | 33,342 | 202.20 |
| 2018 | 20,398 | 17,860 | 37,315 | 213.25 |
| 2019 | 20,352 | 17,480 | 33,583 | 175.67 |

*மூலம்: இலங்கை பொருளாதார சமூகப் புள்ளிவிபரங்கள் - 2020, இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏற்றுமதி செயலாற்றக் குறிகாட்டிகள் - 2019, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை*

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின்படி, 2019இல் இலங்கை ஐ.அ.டொலர் 175.67 மில்லியன் பெறுமதியான கறுவாவினை ஏற்றுமதி செய்திருப்பதுடன் அதன் கறுவாவானது உண்மையான தன்மை காரணமாக இலங்கை கறுவாவிற்கான உலகின் மிக உயர்ந்த ஏற்றுமதி விலையினைப் பெற்றுக்கொண்டதன் மூலம் இலங்கை உலகின் முதல்தர கறுவா ஏற்றுமதி நாடாகத் தோற்றம் பெற்றிருக்கிறது. கறுவாவின் இவ்வேற்றுமதிப் பெறுமதி 2019இல் இலங்கையின் மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில் 1.47 சதவீதத்திற்கு பங்களித்திருக்கிறது. இவ்வேற்றுமதி அளவில் ஏறத்தாழ 80 சதவீதம் மெக்சிக்கோ, ஐக்கிய அமெரிக்கா, பேரு, குவாத்தமாலா, பொலிபியா, கொலம்பியா மற்றும் ஈகுவடோர் போன்ற உலகின் முக்கிய சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 2019இல் இலங்கை ஐ.அ.டொலர் 67.81 மில்லியன் பெறுமதியான கறுவாவினை மெக்சிக்கோவிற்கு ஏற்றுமதி செய்ததுடன் இது இலங்கையினால் மெக்சிக்கோவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தக் கறுவாவில் 42.27 சதவீதமாகும். 2019இல் இலங்கையின் மொத்தக் கறுவா ஏற்றுமதியில் மிக உயர்ந்த பங்கினை மெக்சிக்கோ வாங்கியதுடன் இது, 38.6 சதவீதமாகும். ஐக்கிய அமெரிக்கா, இலங்கையின் கறுவா ஏற்றுமதியில் அடுத்த பெரிய வாங்குநராகக் காணப்படுகிறது. சதவீதமாகப் பார்க்கையில் நாட்டின் கறுவாப் பெறுமதியில் 13.7 சதவீதமாகவும் பெறுமதியில் ஐ.அ.டொலர் 24.09 மில்லியனாகவும் காணப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை - 2020 இன்படி, கறுவாவின் ஏற்றுமதி வருமானம் ரூ.42,131 மில்லியனாகும். இது 2019 உடன் ஒப்பிடுகையில் 25 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகக் காணப்பட்டதுடன் 2020இல் வாசனைத்திரவியங்களிலிருந்தான மொத்த ரூபா வருமானத்தின் பங்காக 68 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. மேலும், அறிக்கையின்படி, வாசனைப்பொருட்களின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 333.5 மில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டதுடன் இது 2019 உடன் ஒப்பிடுகையில் 6.7 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு கறுவா ஏற்றுமதியிலிருந்து கிடைத்த வருவாய்கள் பக்கபலமாக விளங்கின.

### கறுவா உற்பத்தி

கறுவாப் பட்டையை உரிப்பதும் கறுவாச் சுருள்களைத் தயாரிப்பதும் இலங்கைக்கான சுதேச முறையாகும். கறுவா

### அட்டவணை 2 - ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு

| வகை | 2019 | | 2020 (அ) | | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,461.9** | **20.6** | **2,336.2** | **23.3** | **-125.6** | **-5.1** | **6.6** |
| தேயிலை | 1,346.4 | 11.3 | 1,240.9 | 12.4 | -105.5 | -7.8 | 5.6 |
| தெங்கு | 329.5 | 2.8 | 345.2 | 3.4 | 15.7 | 4.8 | -0.8 |
| வாசனைப் பொருட்கள் | 312.5 | 2.6 | 333.5 | 3.3 | 20.9 | 6.7 | -1.1 |
| கடலுணவு | 262.5 | 2.2 | 189.8 | 1.9 | -72.6 | -27.7 | 3.8 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 120.0 | 1.0 | 134.7 | 1.3 | 14.6 | 12.2 | -0.8 |
| மரக்கறிகள் | 32.0 | 0.3 | 36.6 | 0.4 | 4.6 | 14.3 | -0.2 |
| இறப்பர் | 24.2 | 0.2 | 30.1 | 0.3 | 5.9 | 24.4 | -0.3 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 34.7 | 0.3 | 25.5 | 0.3 | -9.2 | -26.6 | 0.5 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **9,426.3** | **78.9** | **7,672.0** | **76.4** | **-1,754.3** | **-18.6** | **92.7** |
| புடவைகளும் ஆடைகளும் | 5,596.5 | 46.9 | 4,423.1 | 44.0 | -1,173.4 | -21.0 | 62.0 |
| இறப்பர் உற்பத்திகள் | 866.1 | 7.3 | 786.1 | 7.8 | -80.0 | -9.2 | 4.2 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 447.0 | 3.7 | 464.0 | 4.6 | 17.0 | 3.8 | -0.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 521.1 | 4.4 | 373.6 | 3.7 | -147.6 | -28.3 | 7.8 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 400.0 | 3.3 | 337.5 | 3.4 | -62.5 | -15.6 | 3.3 |
| இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணங்கள் | 305.7 | 2.6 | 181.5 | 1.8 | -124.3 | -40.6 | 6.6 |
| போக்குவரத்துக் கருவிகள் | 145.9 | 1.2 | 71.4 | 0.7 | -74.5 | -51.0 | 3.9 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 102.9 | 0.9 | 53.9 | 0.5 | -48.9 | -47.6 | 2.6 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 48.3 | 0.4 | 47.9 | 0.5 | -0.4 | -0.8 | 0.02 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 30.1 | 0.3 | 24.0 | 0.2 | -6.1 | -20.2 | 0.3 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 962.8 | 8.1 | 909.0 | 9.0 | -53.8 | -5.6 | 2.8 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **33.9** | **0.3** | **25.1** | **0.2** | **-8.8** | **-25.9** | **0.5** |
| **வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **17.9** | **0.2** | **14.1** | **0.1** | **-3.8** | **-21.4** | **0.2** |
| **மொத்த ஏற்றுமதிகள் (ஆ) (இ)** | **11,940.0** | **100.0** | **10,047.4** | **100.0** | **-1,892.6** | **-15.9** | **100.0** |
| **ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் (ஈ)** | **178.78** | | **185.52** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் ஏற்றுமதிகள் நீங்கலாக
(இ) பின்னடைவுகள் மற்றும் பதிவுசெய்த பிற காரணிகளுக்காகச் சீராக்கப்பட்டது
(ஈ) ரூபா/ஐ.அ.டொலர் செலாவணி வீதம்

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

*(மூலம்: ஆண்டறிக்கை 2020, இலங்கை மத்திய வங்கி)*

உற்பத்தியின் இம்முறையானது இலங்கை கறுவாவினை அடையாளப்படுத்திக் கொள்ளும் முறையாகக் காணப்படுகிறது. இயற்கையான நிலைமைகளின் கீழ், கறுவா மரம் 10-15 மீற்றர் உயரத்திற்கு வளர்வதுடன் இலை பரப்பும் சுற்றளவு 60-75 செ.மீற்றர்களுக்கிடையில் காணப்படுகிறது. வரண்ட வானிலை வலையங்கள் கறுவா பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமானதல்ல. குறிப்பாக, கறுவாவிற்கு தாழ்நில செம்மண்ணிற லெட்டோபொலிக் மற்றும் பிளவற்ற கம்பளி போன்ற மண் ஏற்புடையதாகும். செந்நிற மற்றும் வண்டல்மிகு மண்ணும் கறுவா பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமாகும். மிகப் பொருத்தமான வெப்பவீச்சு 25°C - 30°C ஆக இருக்கும். வருடாந்த மழைவீழ்ச்சி 1,875 மி.மீற்றருக்கும் 3,750 மி.மீற்றருக்குமிடையில் காணப்படுவது பொருத்தமானதாகும்.



கறுவாப்பட்டை, இலை, கிளை என்பனவற்றின் சுவை மற்றும் காரசாரமான தன்மை என்பனவற்றினைப் பொறுத்து ஐந்து

விதமான பாரம்பரிய கறுவா வகைகள் காணப்படுகின்றன. அவையாவன “பனி-மிறிஸ் குருந்து”, “பனி-ரச குருந்து”, “செவல குருந்து”, “கஹட்ட குருந்து” மற்றும் “தித்த குருந்து”. எனினும் “பனி-மிறிஸ் குருந்து” மற்றும் “பனி-ரச குருந்து” என்பன வர்த்தக ரீதியிலான உற்பத்திக்குச் சிறந்தனவாகும். அத்துடன், கறுவா இலையின் வடிவத்தினை பொறுத்து ஏழு வகையான கறுவா வகைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவையாவன சாதாரண கறுவா இலை வடிவம், பெரிய இலை வடிவம், சிறிய வட்ட வடிவம், பெரிய வட்ட வடிவம், உள்வளைந்த சாதாரண இலை, குறுகிய மெல்லிய இலை மற்றும் நீண்ட மெல்லிய இலை.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தரமானதும் உயர் விளைச்சலைத் தரக்கூடியதுமான முன்னுரிமைக்குரிய கறுவாவினை அடையாளம் காணும் பொருட்டு பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதன்படி, சிறி கெமுனு மற்றும் சிறி விஜய என்பன அறிமுகப்படுத்தப்பட்டன.

**அட்டவணை 3: மேம்படுத்தப்பட்ட சிறி கெமுனு மற்றும் சிறி விஜயவின் விசேட பண்புகள்**

| விபரணம் | சிறி கெமுனு | சிறி விஜய |
|---|---|---|
| பட்டை அறுவடை (கிகி/எக்) | 1200 – 1300 | 1600 – 1800 |
| பட்டை எண்ணெய் % | 3.2 – 3.6 | 1.4 – 1.6 |
| இலை எண்ணெய் % | 3.6 – 3.9 | 2.9 – 3.1 |
| பட்டையில் கறுவா உள்ளடக்கியுள்ள % | 80.0 – 83.0 | 50.0 – 55.0 |
| இலையில் திரவ எண்ணெய் உள்ளடக்கியுள்ள % | 88.0 – 92.7 | 90.0 – 94.0 |

*(மூலம்: தொழில்நுட்பவியல் வெளியீடு - 5, ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்)*

**கறுவா பதனிடல்**

கறுவா பதனிடலுக்கு மிகச் சிறந்த அறிவும் அனுபவமும் தேவைப்படுகிறது. கறுவா பயிரிடுவோர் அநேகர் காணப்படுகின்ற வேளையில் கறுவா பதனிடுவதில் ஒரு சிலர் மாத்திரமே அறிவும் அனுபவமும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே, கறுவா உற்பத்தியாளர் கறுவா தயாரிப்பதற்காக அதிகளவு செலவினை தாங்கிக் கொள்ள வேண்டியவர்களாகவுள்ளனர். வழமையாக கறுவா பதனிடும் சாதனங்களாக “கபன கெட்டா”, “தலன கொகெட்ட”, பித்தளைக் கம்பி, கத்தரிக்கோல், “அன்ஜிலி கொபுவ”, அளவிடும் கம்பி (பெதி கொட்டுவ) மற்றும் “சூறண கொகெட்ட” என்பன காணப்படுகின்றன.

முக்கியமாக, கறுவா பதனிடலில் மரத்தின் மேல்பட்டைகள் சுரண்டப்படல் வேண்டும். பின்னர் இதனை பித்தளைக் கம்பியினால் துடைத்துவிடுவது முக்கியமானதாகும். பொதுவாக, கறுவாவினை தூளாக்குவது கடினமான வேலையாகும். விசேடமாக கறுவா மரத்தில் புதிய இலைகள்

**கறுவா பதனிடும் சாதனங்கள்**




*(மூலம்: தொழில்நுட்ப அறிக்கை - 5, ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்)*



அல்லது பூ மலரும் நேரத்தில் இவ்வாறு மேற்கொள்வது கடினமான வேலையாகும். நீண்ட வரண்ட பருவ காலத்தில் பித்தளைக் கம்பியின் உதவியுடன் கறுவாப்பட்டையினைத் துடைத்து சுத்தம் செய்வதன் மூலம் கறுவாப்பட்டையினை உரிப்பதற்கு கூடியளவு முயற்சி எடுக்கப்படல் வேண்டும். சில நேரங்களில் கறுவாவினைத் தூளாக்குவது சில வாரங்களுக்கு இடைநிறுத்தப்படுகிறது. பட்டையினை விரும்பத்தக்க மட்டங்களுக்கு எடுத்ததன் பின்னர் வெட்டுகின்ற வேலையினை மேற்கொள்ளலாம். பட்டைகளை கிளைகளிலிருந்து வேறாக்கியதன் பின்னர் சுருள்கள் இணைக்கப்பட்டு நிரப்பப்படுகின்றன. இறுதியாக, வெட்டப்பட்ட சுருள்களைப் பதனிட முடியும்.

### கறுவா உற்பத்தியின் வரைவிலக்கணம்

பன்னாட்டுத் தரங்களை அடையாளம் காண்பதற்குப் பின்வரும் வரைவிலக்கணங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

#### 1. கறுவாச் சுருள்கள் (முழு ரியூப்கள்)

முதிர்ச்சியடைந்த கறுவாவின் கிளைகளினது உட்பட்டையின் சுருண்டப்பட்ட தோல்கள் ஒன்றின் மேலொன்று வைக்கப்பட்டு ஒன்றாக இணைக்கப்படுவதன் மூலம் கறுவாச் சுருள்கள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றிற்கு உள்ளேயுள்ள இடைவெளிகள் உரிக்கப்பட்ட அதே கறுவாவின் சிறிய துண்டுகளைப் பயன்படுத்தி நிரப்பப்பட்டு காற்றில் உலர்த்தப்படுகின்றன. சுருளொன்று ஏறத்தாழ 105 செ.மீற்றர்களாக (± 5 செ.மீற்றர்) இருத்தல் வேண்டும். அதன் பின்னர் கறுவாச் சுருள்கள் வெவ்வேறுபட்ட தரங்களாகப் பிரிக்கப்படுகின்றன.

#### 2. கறுவாச் சுருள்களை வெட்டுதல்

கறுவாச் சுருள்கள் குறிப்பிட்ட நீளங்களில் வெட்டப்படுகின்றன. கறுவாச் சுருள்கள் முழுமையான டியூப் கறுவாச் சுருள்களாகத் தரமிடப்படுகின்றன.

#### 3. கறுவாவினை சுருள்களாக்குதல் (முழு டியூப்புக்களிலிருந்து உடைக்கப்பட்ட டியூப்புக்கள்)

முழு டியூப் கறுவாச் சுருள்களிலிருந்து வேறுபட்ட நீளங்களில் சுருள்கள் உடைக்கப்படுவதுடன் 200 மி.மீற்றர்களுக்கும் குறைவான சுருள்களும் சிறு சீவல் துண்டுகளும் இவ்வகையின் கீழ் பரிசீலனையில் கொள்ளப்படுகின்றன. இது நிறையின்படி, கறுவாத் துண்டுகளையும் கறுவா சீவல்களையும் 5 சதவீதம் வரையில் உள்ளடக்கியிருக்கலாம். மற்றைய பொருட்கள் 2 சதவீதத்திற்கும் கூடுதலானவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

#### 4. சிறிய துண்டுகள்

இவை கறுவாச் சுருள்களைத் தயாரிக்கும் செய்முறையின் போது உடைகின்ற பட்டைகளின் சிறிய துண்டுகளாகும். நிறையின்படி, இது 10 சதவீதம் வரையிலான கறுவாச் சீவல்களைக் கொண்டிருக்க முடியும். மற்றைய விடயங்கள் 2 சதவீதத்திற்கும் கூடுதலான விடயத்தினை உள்ளடக்கியிருக்கக்கூடாது.

#### 5. கறுவாச் சீவல்கள்

முதிர்ச்சியடைந்த கடினமான உரிக்க முடியாத பச்சை நிறம் கலந்த மண்ணிறமான வெளிப்பட்டைகள் கறுவாச் சீவல்கள் என அழைக்கப்படுகின்றன. இதனைத் தடிகளிலிருந்து உரிக்க முடியாது என்பதனால் இதனைச் சுரண்ட வேண்டியிருக்கும். மற்றைய விடயங்கள் 2 சதவீதத்திற்குக் கூடுதலானளவில் உள்ளடக்கப்படக்கூடாது.

#### 6. அரைக்கப்பட்ட கறுவா

தூளாகக் காணப்படும் இது தூய்மையான கறுவாவினை அரைப்பதன் மூலம் பெறப்படுகிறது.

#### 7. முழுக் கறுவா

கறுவாத் தூள் தவிர்ந்த அனைத்து வர்த்தக ரீதியான கறுவா உற்பத்திகளும் முழுக் கறுவா என அழைக்கப்படுகின்றன.

#### 8. செப்பப்படுத்தப்படாத பூ மற்றும் செப்பமிடப்படாதவை

கறுவா மரத்தின் மேற்பரப்பில் இளமஞ்சள் நிறத்திலமைந்த புள்ளிகள் செப்பப்படுத்தப்படாத பூ என அழைக்கப்படுகிறது. இவை பின்னர் கடும் மண்ணிற புள்ளிகளாக மாற்றமடைகின்றன. அப்பொழுது இவை செப்பப்படுத்தப்படாதவை என அழைக்கப்படுகின்றன.

#### 9. கறுவாச் சிப்பங்கள்

ஒரே தரத்திலமைந்த கறுவாச் சுருள்கள் ஏற்றுமதிக்குப் பொருத்தமான விதத்தில் சிப்பங்களாகக் காட்டப்படுகின்றன. இவை கறுவாச் சிப்பங்கள் என அழைக்கப்படுகின்றன. சிப்பத்தின் உயரமும் நிறையும் குறிப்பிட்ட நியமங்களில் இருத்தல் வேண்டும் (உயரம் 105 ± 5 செ.மீற்றராகவும்

நிறை 45 கி.கிறாம் அல்லது 25 கி.கிறாம்களாகவும் இருத்தல் வேண்டும்.

*(மூலம்: தொழில்நுட்பவியல் வெளியீடு - 5, ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்)*

**கறுவா பயிர்ச்செய்கையிலும் உற்பத்தியிலும் எதிர்நோக்கப்படும் சவால்கள்**

**1. அதிகரிக்கின்ற செலவு**

இலங்கையில் கறுவாவின் பயிர்ச்செய்கை செலவு, பொருட்களின் செலவு, கறுவா உற்பத்தியின் பதனிடல் செலவு, குறிப்பாக, வளமாக்கி விலைகளில் காணப்படும் செலவு மற்றும் பதனிடல் செலவுகளின் பேணலில் அதிகரித்துச் செல்லும் போக்குக் காணப்படுகிறது. கறுவா உரிப்பவர்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது. தற்பொழுது ஏறத்தாழ 33,000 எக்டேயர் கறுவாப் பயிர்ச்செய்கை 30,000 பயிற்சிபெற்ற கறுவா உரிப்பவர்களைக் கொண்டிருக்கிறது. இவ்வேலைக்கு குறைந்தபட்சம் 50,000 கறுவா உரிப்போர் தேவைப்படுகின்றனர். தொழிற்சந்தையில் காணப்படும் பன்முகப்படுத்தப்பட்ட சந்தை வாய்ப்புக்களின் காரணமாக தென்கரையோரம் முழுவதிலும் சிதறிக் காணப்படும் இளம் தொழிலாளர்கள் கறுவாத் தொழிலிருந்து படிப்படியாக வெளியேறி வருகின்றனர். இத்தொழில் போதியளவிற்கு அங்கீகரிக்கப்படாமையும் அவர்கள் வெளியேறுவதற்கு வழிவகுத்திருக்கிறது. இத்துறைக்கு இப்பயிற்சிபெற்ற வேலையாட்களின் பணி உறுதியான விதத்தில் கிடைப்பது கறுவா உற்பத்தியின் தரத்தினைப் பேணுவதற்குத் தவிர்க்க முடியாத காரணியாகும்.

அண்மைய தசாப்த காலத்தில் கறுவாப் பயிர்ச்செய்கையாளர்களின் மனோபாவமும் செயலூக்கமும் படிப்படியாகக் குறைந்து வருவதனைக் காணமுடியும். அதிகரித்த உற்பத்திச் செலவின் காரணமாக பெறுமதிகூட்டப்பட்ட கறுவாத் தயாரிப்பாளர்களினால் போதுமானதற்ற நன்மைகளும் ஒத்துழைப்பும் பெறப்படாமை இதற்கான காரணங்களாக விளங்குகின்றன. மேலும், எமது கறுவா வாங்குநர்களின் பேரம்பேசும் சக்தியினால் உருவாக்கப்பட்ட மேலதிகச் சுமையின் அதிகரித்த செலவினையும் தற்போதைய முறைமையில் காணப்படும் பலயீனமான தன்மையினையும் ஈடுசெய்து கொள்வது மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

**2. போதுமானதற்ற உட்கட்டமைப்பு**

நாடு முழுவதிலும் 250,000 கறுவாச் செய்கையாளர்கள் காணப்பட்ட போதும் பெரும்பாலான நிலங்கள் நுண்பாக நிலச் சொந்தக்காரர்களுக்குச் சொந்தமானவையாகவேயுள்ளன. உட்கட்டமைப்பு போதுமானளவில் இல்லாமை இந்நுண்பாக நிலச் சொந்தக்காரர்களினால் உற்பத்தி செய்யப்படும் கறுவாவினை விரயம் செய்யாமல் தரமானதும் தூய்மையானதுமான கறுவாவாக உற்பத்தி செய்வது தொடர்பில் பாரிய கரிசனைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது. ஆகவே, இது தரமான கறுவா உற்பத்தியைக் கடுமையாகப் பாதிக்கிறது.

**3. பெறுமதி கூட்டலில் காணப்படும் குறைபாடுகள்**

இலங்கை உற்பத்திகள் ஏற்றுமதிச் சந்தைகளுக்காக ஒரு சில பெறுமதிகூட்டப்பட்ட உற்பத்திகளை மாத்திரமே கொண்டிருக்கின்றன. எனினும், கறுவா பல்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தக்கூடியதொரு பயிராகும். ஆனால், உற்பத்திகளின் குறைந்த வீச்சு சவாலுக்குரியதாகக் காணப்படுகிறது. கறுவாவிற்கான புதிய போக்குகளுக்கு முன்னுரிமையளிப்பதும் புதிய சந்தைகளை எதிர்பார்ப்பதும் கூட சவாலாகவே காணப்படுகிறது.

**4. குறைந்த தரக் கறுவாச் சந்தையிலிருந்தான அச்சுறுத்தல்கள்**

உயர்தர நியமங்களைக் கொண்ட கறுவா உற்பத்திகளுக்கெதிராக, தரம் குறைந்த கறுவா உற்பத்திகள் சந்தையில் நிரம்பிக் காணப்படும் போக்கொன்று அண்மைக் காலமாக அவதானிக்கப்பட்டிருக்கிறது. உயர் தர கறுவா உற்பத்திகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டிருக்கின்ற போதும் கூட, உள்நாட்டுச் சந்தைகளுக்கு இவற்றை வெற்றிகரமாக எடுத்துச் செல்வதற்குப் பிராந்திய மட்டத்தில் இடையேற்பாட்டாளர்கள் இல்லை. தற்போதைய கறுவாச் சந்தை பிராந்திய சந்தையாகக் காணப்படுவதுடன் இது குறைந்த தர கறுவா வாங்குநர்களையே உள்ளடக்கியிருக்கிறது. பொருத்தமற்ற முறையில் கறுவா களஞ்சியப்படுத்தப்படுவதினதும் கொண்டு செல்லப்படுவதினதும் காரணமாக அவை சுகாதார மற்றும் நலப் பிரச்சனைகளைத் தோற்றுவிக்கின்றன. பயிர்ச்செய்கையாளர் மற்றும் இடையேற்பாட்டளர்களிடையே கறுவா தொடர்பான பன்னாட்டுத் தரங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான அறிவும் போதுமானதாக இல்லாமை கறுவாவின் தரம் வீழ்ச்சியடைந்து செல்வதனை பெரிதாக்கியிருக்கின்றது. ஆயிரக்கணக்கான கறுவா உற்பத்தியாளர்களுடன் ஒப்பிடுகையில் ஒரு சில கறுவா சேகரிப்பாளர்களே உள்நாட்டுச் சந்தையில் காணப்படுகின்றனர். எனவே, கறுவா உற்பத்திகளை வாங்குவதற்காக இச்சேகரிப்பாளர்களிடம் காணப்படக்கூடிய உயர்ந்த போட்டி உற்பத்திகளின் தரம் கவனத்தில் கொள்ளப்பட்டமைக்கான காரணமாக மாறியிருக்கிறது. மேலும், தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான செலவு உயர்வாக இருப்பதனால் அத்தகைய தர நியமச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஆர்வம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

**5. தரமற்ற பயிரிடல் முறைகள்**

கறுவா பயிரிடலுக்காக மிகப் பொதுவாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற முறையாக விதை நாற்று மூலமான பயிரிடுதல்

காணப்படுகின்றது. இம்முறையானது புதிய பயிரிடல் நிலங்களிலும் கைவிடப்பட்ட பயிரிடல் நிலங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், இவ்விதைகளைப் பயிரிடும் போது அதே தரத்திலான சிறந்த விதைக் நாற்றுக்கன்றுகளைப் பெற்றுக் கொள்வதில் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களே காணப்படுகின்றன. உயர்தர நாற்றுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு வேளாண்மையாளர்கள் அணுகக்கூடிய வழிவகைகள் (அல்லது பயிரிடல் மூலப்பொருட்கள்) குறைவாக இருப்பதன் காரணமாக வேறுபட்ட தரங்களிலான வேறுபட்ட வகைக் கன்றுகளே கிடைக்கின்றன. இது பிரச்சனைக்குரிய சூழ்நிலையினைத் தோற்றுவிக்கிறது. மாற்று முறையொன்றாக, கிளைகளைப் பயன்படுத்தி மரக்கன்றுகள் வளர்க்கப்படுகின்றன. எனவே, போதுமான நாற்றுக்களைப் பெறுவதற்குப் போதுமான தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படாமை போன்றவற்றிலிருந்தும் இடர்ப்பாடுகள் தோன்றியிருக்கின்றன.

### 6. ஏற்றுமதிக்கான மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்கள்

மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான நாடுகளுக்கு மாத்திரம் கறுவாவினை ஏற்றுமதி செய்வது சவால்மிக்கதாகும். தற்பொழுது, கறுவா ஏற்றுமதிக்கான முக்கிய சந்தைகளாக மெக்சிக்கோ, கொலம்பியா, பேரூ மற்றும் ஜேர்மனி என்பன காணப்படுகின்றன. கறுவா ஏற்றுமதியின் முக்கிய நாடாக மெக்சிக்கோ காணப்படுவது ஒன்றுதிரண்ட இடர்நேர்விற்குக் காரணமாகிறது. அத்துடன் பன்னாட்டுச் சந்தையில் எமது கறுவா உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான சந்தைகள் போதுமானளவில் காணப்படாமையும் சந்தைத் தேவைப்பாடுகள் தொடர்பில் கறுவா பற்றி போதுமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படாமையும் கறுவாச் சந்தையின் அபிவிருத்தியைக் கடுமையாகப் பாதித்திருக்கின்றன.

### 7. பாரம்பரிய உற்பத்தி முறைகளிலிருந்து வெளியேறாமல் இருத்தல்

பாரம்பரிய உற்பத்தியாளர்களிடையே காணப்படும் மரபுவழி மனோபாவத்தினை மாற்றிக் கொள்வது தொடர்பிலும் கறுவா உற்பத்தி தொடர்பில் மிகக் காத்திரமான தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவது தொடர்பிலும் தடைகள் காணப்படுகின்றன. உயர்ந்த தொழிலாளர் பங்களிப்புடன் பாரம்பரிய முறைகள் பின்பற்றப்பட்டு வருவதும், தொழிலாளர்களின் தற்போதைய கூலிகளும் தொழிலாளர்கள் போதுமானளவில் இல்லாமையும் உற்பத்திச் செலவு அதிகரிப்பதற்கான முக்கிய காரணிகளாக மாறியுள்ளன. கறுவா பதனிடலுக்காக அநேக நவீன தொழில்நுட்பவியல் அபிவிருத்திகள் காணப்பட்ட போதும் கூட, பாரம்பரிய உற்பத்தியாளர்கள் மரபுவழி முறைகளிலிருந்து வெளியேற விரும்பாமை முக்கிய பிரச்சனையினைத் தோற்றுவித்திருக்கிறது. கறுவாப்பட்டை உரிப்போர் உற்பத்திகளின் தரங்கள் பற்றியோ அவர்களது ஆரோக்கியம் பற்றியோ கவனம் செலுத்தாமல் பல மணித்தியாலங்கள் வேலை செய்கின்றனர். இக்கட்டத்தில், கறுவாவின் தரத்தினைக் குறைக்கின்ற கறுவாவிற்கான வெளிபுற சாரம்சக் காரணிகளையும் இணைப்பது இடர்ப்பாடானதாகும். இப்பணிக்கு உயர்தர பயிற்சி தேவைப்படுவதுடன் இது கூடியளவு நேரத்தினையும் எடுக்கும். இவை கறுவா தொழில் துறையில் பாரிய சவாலாக மாறும். போதுமான அறிவில்லாமை, புதிய முறையியல்களைப் பின்பற்றுவதில் காணப்படும் உயர்ந்த செலவு, புதிய தொழில்நுட்பங்களுக்காகச் செய்யப்படும் முதலீடுகளின் மீதான நம்பிக்கை குறைவாக இருப்பது என்பன மரபுவழிமுறைகளைப் பயன்படுத்துவதற்கான முக்கிய காரணிகளாக மாறியிருக்கின்றன.

### 8. நெகிழ்ச்சித்தன்மை மீதான அறிவு போதுமானளவில் இல்லாமை

கறுவா பயிரிடுவோருடனும் சேகரிப்பாளர்களுடனும் கறுவா பயிர்ச்செய்கை தொடர்பான பிரச்சனைகளையும் போக்குகளையும் காத்திரமான முறையில் கலந்துரையாடுவதற்கும் அவர்களிடையே இணைப்புக்களை ஏற்படுத்துவதற்கும் வலுவானதும் சரியானதுமான இணைப்புக்கள் எதுவுமில்லை என்பதுடன் புதிய சந்தைகள் போதுமானளவில் கண்டறியப்படாமை பயிர்ச்செய்கை மீதான அரசாங்கத்தின் தலையீடு மீதான புரிந்துணர்வு என்பன உள்நாட்டுக் கறுவா தொழில் துறையினால் எதிர்நோக்கப்படுகின்ற சவால்களாகக் காணப்படுகின்றன.

### 9. மாற்று உற்பத்திகளின் விரிவாக்கம்

மேலும், கறுவாவிற்கான மாற்று உற்பத்திகள் உலகம் முழுவதும் பிரபல்யம் பெற்றுவருகின்றன. காசியாக் கறுவாவின் தரம் குறைவாக இருந்த போதும் உயர்ந்த விலை வேறுபாடுகளின் காரணமாக இன்று இது பொதுவாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது இலங்கையின் கறுவாத் தொழில் துறைக்குப் பாரிய சவாலாக மாறியிருக்கிறது.

### கறுவா பயிர்ச்செய்கைக்கான தடைகளை எவ்வாறு வெற்றிகொள்வது?

### 1. புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல்

மரபுவழி மனோபாவங்களிலிருந்து விடுபட்டு கறுவா உற்பத்தி தொடர்பில் மிகக் காத்திரமான தொழில்நுட்பவியலைப் பின்பற்றுவது கறுவா உற்பத்தியின் செலவினைக் குறைப்பதற்கு உதவும். பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசாங்கம் வளமாக்கி உதவுதொகையினை வழங்குவதற்கு முன்வரும். கறுவாப்பட்டை உரிப்போருக்குச் சரியான பயிற்சியை வழங்குவதும் அவர்களின் சமூக ரீதியான அந்தஸ்தினை மேம்படுத்துவதும் அவசியமானவையாகும்.

### 2. உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி

தரம் குறைந்த பொருட்கள் நீங்கலாக தூயதரமான கறுவா உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கான உட்கட்டமைப்பிற்கு

வசதியளிப்பதற்காக கறுவாத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள நுண்பாக மட்ட பயிர்ச்செய்கையாளர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வசதிகள் தேவைப்படுகின்றன. சிறந்த உற்பத்திக்கான உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான அறிவு உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

### 3. பெறுமதிகூட்டப்பட்ட கறுவா உற்பத்திகள் மற்றும் சந்தை ஊக்குவிப்புக்கள்

பெறுமதிகூட்டப்பட்ட கறுவா உற்பத்திகள் பற்றி கறுவா உற்பத்தியாளர்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் பெறுமதிகூட்டப்பட்ட உற்பத்திகளின் அளவினை விரிவுபடுத்த முடியும். பெறுமதிகூட்டப்பட்ட உற்பத்திகளுக்கான சந்தையினை ஊக்குவிப்பதற்கு அரசாங்கத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### 4. தர உத்தரவாதம்

கறுவா உற்பத்திகளின் தரத்தினை பாதுகாத்துக் கொள்வதற்காக, தரம் குறைந்த கறுவா உற்பத்திகள் சந்தைக்குள் நுழைவதனை ஊக்கம் குன்றச் செய்யவேண்டும் என்பதுடன், கறுவா உற்பத்திகளுக்காக ஏற்றுக்கொள்ளத்தக்க குறைந்தபட்ச தரங்களைப் பேணுவதற்கு சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அத்துடன், பன்னாட்டு நியமங்கள் தொடர்பிலும் கறுவா தொடர்பான செலவுகள் பற்றியும் பயிர்ச்செய்கையாளர்களுக்கும் இடையேற்பாட்டாளர்களுக்கும் போதுமான அறிவு வழங்கப்படல் வேண்டும். தரச் சான்றிதழைப் பெறுவதற்கான உயர்ந்த செலவு பற்றி உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

### 5. கறுவாப் பொருட்களை முடிவுப்பொருளாக்குவதில் உயர்ந்த கவனம் தேவை

இலங்கையில் கறுவா முக்கியமாக மூலப்பொருளாகவே ஏற்றுமதி செய்யப்படுகிறது. கறுவா உற்பத்திகளை முடிவுப்பொருட்களாக மாற்றியமைக்குமிடத்து உயர்ந்த வருமானத்தினை ஈட்ட முடியும். ஆகவே, கறுவா உற்பத்திகளை முடிவுப்பொருட்களாக ஏற்றுமதி செய்வதற்குப் பொருத்தமான திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளையில் அதனைத் தொடர்ந்தும் மூலப்பொருட்களாக ஏற்றுமதி செய்து வருதல் வேண்டும்.

### 6. தீவிரமான பயிரிடல் உத்திகள்

மரக் கன்றுகளை நாட்டுகின்ற முறையியலின் மீது கறுவா பயிர்ச்செய்கைக்கு பொறுப்பாகவுள்ள தொடர்பான நிறுவனங்களினால் நேரடிப் பங்களிப்பு வழங்கப்படல் வேண்டும்.

### 7. புதிய ஏற்றுமதிச் சந்தைகளைக் கண்டறிதல்

கறுவாவிற்குக் கிடைக்கத்தக்க புதிய சந்தைகளைக் கண்டறிவதற்கு அனைத்து பொறுப்பான தரப்பினரும் நேரடியாகப் பங்களித்தல் வேண்டும். தற்போதைய சந்தைகளுக்கு ஏற்றுமதிகளின் இயலாற்றலை அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் பற்றி ஆய்வுகள் நடத்தப்படல் வேண்டும்.

### 8. சிறந்த இணைப்பு வசதிகள்

புதிய சந்தைகளைக் கண்டறிதல் மற்றும் கறுவா பயிர்ச்செய்கை தொடர்பான அரச தலையீட்டின் மட்டத்தின் மீது புரிந்துணர்வொன்றினைக் கொண்டிருப்பது உட்பட, கறுவா பயிர்ச்செய்கை தொடர்பான பிரச்சனைகளையும் போக்குகளையும் பயிரிடுவோருடனும் சேகரிப்பாளர்களுடனும் காத்திரமான விதத்தில் கலந்துரையாடப்படுவதனை ஊக்குவிப்பதற்காகப் பொருத்தமானதும் வலுவானதுமான இணைப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### 9. அதிகரித்த கறுவா உற்பத்தி

தரம் குறைந்த காசியா போன்ற மட்டமான கறுவா உற்பத்திகளின் குறைந்த விலைகளுடன் சந்தைப் போட்டியினைக் கொண்டிருக்கும் விதத்தில் உண்மையான இலங்கை கறுவாவின் உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். உண்மையான இலங்கை கறுவாவிற்கான எக்டேயருக்கான விளைச்சலை அதிகரிப்பதற்கு ஆராய்ச்சிகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

### உசாத்துணை


1. Annual Report 2020, Central Bank of Sri Lanka
2. Economic and Social Statistics of Sri Lanka - 2019, Central Bank of Sri Lanka
3. Export Performance Indicators – 2019, Export Development Board of Sri Lanka
4. Technical Publication - 5, Department of Export Agriculture
5. Statistical Thesis - 2019, Chief Secretary Office - Southern Province
6. https://www.cbsl.gov.lk - Central Bank of Sri Lanka
7. http://www.exportagridept.gov.lk/ - Department of Export Agriculture (DEA)
8. http://www.srilankabusiness.com - Sri Lanka Export Development Board
9. https://www.srilankanspices.com - The Spice Council

# பொருளாதார முறைமையின் செயற்பாட்டுச் சுற்றோட்டமும் நிதியியல் முறைமையின் முக்கியத்துவமும்

எஸ். குறிஞ்சிதரன்
பிரதிப் பணிப்பாளர்
வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்


ஒவ்வொரு நாடும் தமது வளங்களை பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு எவ்வாறு சரியான முறையில் பகிர்ந்தளிப்பது மற்றும் பயன்படுத்துவது என்று தீர்மானிக்க வேண்டியுள்ளது. அந்தவகையில் அவ்வாறான தீர்மானங்களையும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் உள்ளடக்கியதாக ஒரு பொருளாதார முறைமை வடிவமைக்கப்படுகின்றது. எனவே, ஒரு பொருளாதார முறைமை என்பதை பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் நுகர்வு என்பவற்றை ஒருங்கமைக்கின்ற ஒரு கட்டமைப்பாக விளங்கிக் கொள்ளலாம்.

இவ்வாறான உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் நுகர்வு செய்கின்ற செயற்பாடுகளினூடாக பொதுமக்கள் பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்கி விற்கின்ற கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றனர். அந்த வகையில் இப்பொருளாதாரக் கொடுக்கல்வாங்கல்கள் இரண்டு விதமான பாய்ச்சல்களை உருவாக்குகின்றன. அவையாவன,

1. உண்மைப் பாய்ச்சல் (பண்டங்கள் மற்றும் பணிகளின் சுற்றோட்டம்)
2. நிதிப் பாய்ச்சல் (நிதிச் சுற்றோட்டம்)

உண்மைப்பாய்ச்சல் மற்றும் நிதிப்பாய்ச்சல் என்பன எதிர் எதிர் திசை நோக்கியதான ஒரு சுற்றோட்டத்தை ஏற்படுத்துவனவாக இருக்கும். பொருளாதாரத்தின் முக்கிய நான்கு துறைகளான வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசதுறை

**வரைபடம் 1: இரு துறை மாதிரியின் வருமானச் சுற்றோட்டம்**



மற்றும் வெளிநாட்டுத்துறை என்பவற்றின் பொருளாதார செயற்பாடுகளினூடாக ஒரு பொருளாதார முறைமையின் சுற்றோட்டத்தை அறிந்துகொள்ளலாம்.

### 1. இரு துறை மாதிரி

விளங்கிக் கொள்வதற்கு இலகுவாக நாம் இருதுறை மாதிரியின் பொருளாதாரச் சுற்றோட்டத்தை ஆரம்பத்தில் பார்க்கலாம். இங்கு வீட்டுத்துறை மற்றும் நிறுவனத்துறை மட்டுமே பொருளாதாரத்தில் காணப்படுவதாகவும் அரசதுறை மற்றும் வெளிநாட்டுத்துறை என்பன இல்லையென்று எடுத்துக்கொள்ளுவோம். அந்தவகையில் இருதுறை மாதிரியின் சுற்றோட்டத்தினை வரைபடம் 1இல் பார்க்கலாம்.

இவ்வரைபடத்தில் மேற்பாதி உற்பத்திக் காரணிகளின் சந்தையினையும் கீழ்ப்பாதி பண்டங்கள் மற்றும் பணிகளின் சந்தையினையும் குறித்து நிற்கின்றது. இவ்விரு சந்தைகளும் உண்மை மற்றும் நிதிப்பாய்ச்சல்களை உருவாக்குவதைக் காணலாம். உற்பத்திக் காரணிகளின் சந்தையில் வீட்டுத்துறையினர் உற்பத்திக் காரணிகளை நிறுவனத்துறையினருக்கு வழங்குகின்றனர். இது உண்மைப் பாய்ச்சல் எனப்படும். அதேநேரத்தில் அவ்உற்பத்திக் காரணிகளுக்கான கொடுப்பனவினை (வட்டி, வாடகை, கூலி, இலாபம்) நிறுவனத்துறை வீட்டுத்துறையினருக்கு வழங்குகின்றது. இந்நிதிப்பாய்ச்சல் வருமானப் பாய்ச்சல் எனப்படும்.

அதேநேரம், பண்டங்கள் மற்றும் பணிகள் சந்தையில் நிறுவனத்துறை தாம் உற்பத்திசெய்த பண்டங்கள் மற்றும் பணிகளை வீட்டுத்துறைக்கு விற்பனை செய்கின்றன. இது உண்மைப்பாய்ச்சல் ஆகும். அப்பண்டங்கள் மற்றும் பணிகளை நுகர்வதற்காக வீட்டுத்துறையினர் அவற்றிற்கான கொடுப்பனவை நிறுவனத்துறைக்கு மேற்கொள்கின்றனர். இந்நிதிப்பாய்ச்சல் செலவீனப்பாய்ச்சல் எனப்படும். இவ்உற்பத்திக் காரணிகள், பண்டங்கள் மற்றும் பணிகள் மற்றும் நிதிப்பாய்ச்சல்களினை ஒன்றிணைப்பதன் மூலம் உருவாகும் ஒரு முடிவில்லா சுற்றோட்டத்தினை இங்கு காணலாம்.

இங்கு வீட்டுத்துறையானது உற்பத்திக் காரணிகளுக்குரிய கொடுப்பனவினை நிறுவனத்துறையிடமிருந்து வருமானமாகப் பெற்றுக்கொள்கிறது. இது ஒரு நாட்டினுடைய மொத்த வருமானமாகக் கருதப்படும். மறுபக்கத்தில் நிறுவனத்துறை அவ் உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தி பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்யும். இது ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியாகக் கருதப்படும். அதேவேளை, வீட்டுத்துறையினர் தமது வருமானத்தினை முழுமையாகச் செலவிட்டு நிறுவனத்துறையினரால் உற்பத்தி செய்யப்பட்ட ஒட்டுமொத்த பண்டங்கள் மற்றும் பணிகளை கொள்வனவு செய்வார்கள். இது ஒரு நாட்டின் மொத்த செலவீனமாகக் கருதப்படும். அந்த வகையில் ஒரு நாட்டினுடைய மொத்த வருமானம், மொத்த உற்பத்தி மற்றும் மொத்தச் செலவீனம் என்பன ஒன்றுக்கொன்று சமமானவையாக இருக்கும். இதனடிப்படையில் ஒரு நாட்டினுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதியை மதிப்பீடு செய்கின்ற போது வருமான அடிப்படையிலோ உற்பத்தி அடிப்படையிலோ அல்லது செலவீன அடிப்படையிலோ கணிப்பீடு செய்ய முடியும். இங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் பெறுமதியைக் குறிக்கும்.

இவ்வுண்மை மற்றும் நிதிச் சுற்றோட்டமானது பல எடுகோள்களின் அடிப்படையில் விபரிக்கப்படுகின்றது. அவற்றை சுருக்கமாகப் பின்வருமாறு கூறலாம்.

#### 1. வீட்டுத்துறை சார்ந்த எடுகோள்கள்

அ. உற்பத்திக் காரணிகள் வீட்டுத் துறையினருக்கு சொந்தமானவை

ஆ. மொத்த வருமானமானது கூலி, வாடகை, வட்டி மற்றும் இலாபத்தை உள்ளடக்குகின்றது.

இ. எல்லா நுகர்வுப் பண்டங்களையும் பணிகளையும் வீட்டுத்துறையினரே நுகர்வர்.

ஈ. வீட்டுத் துறையினர் தமது வருமானத்தில் ஒருபகுதியினை சேமித்து நிறுவனத்துறைக்கு நிதியீட்டம் செய்வார்கள்.

#### 2. நிறுவனத்துறைசார்ந்த எடுகோள்கள்

அ. நிறுவனத்துறை எந்த ஒரு வளங்களையும் கொண்டிராது

ஆ. நிறுவனத்துறை வீட்டுத்துறையிடமிருந்து உற்பத்திக் காரணிகளைப் பெற்றுப் பயன்படுத்தும்

இ. நிறுவனத்துறை பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்து வீட்டுத்துறைக்கு விற்பனை செய்யும்


ஈ. நிறுவனத்துறை சேமிக்காது.

### 2. இரு துறை மாதிரியும் சேமிப்பும்

வீட்டுத்துறையினர் தமது வருமானத்தின் ஒரு பகுதியினை முதலீட்டு நோக்கத்தோடு சேமிக்கிறார்கள். இச்சேமிப்பை நிறுவனங்களுக்கான முதலீடாக வழங்குகின்ற இடையீட்டுச் செயற்பாட்டை பல்வேறு வகையான நிறுவனங்கள் வழங்குகின்றன. இந்நிறுவனங்கள் பொதுமக்களின் சேமிப்பை வைப்புக்களாகப் பெற்று நிறுவனங்களுக்கு கடனாகவோ அல்லது பங்கு மற்றும் பிணையங்களிலோ முதலீடு செய்கின்ற செயற்பாட்டினை வரைபடம் 2 காட்டுகின்றது.

இங்கு வீட்டுத்துறையினர் உற்பத்திக் காரணிகள் மீதான வருமானம் மூலம் நுகர்விற்கான செலவினை (C) மேற்கொள்வதோடு அதன் ஒரு பகுதியினை சேமிக்கிறார்கள் (S) அச்சேமிப்பு நிதித்துறையூடாக நிறுவனத்துறையில்

வரைபடம் 2: நிதித் துறையை உள்ளடக்கிய இருதுறை மாதிரிச் சுற்றோட்டம்





முதலீடு செய்யப்படுகின்றது. ஒரு பொருளாதார முறையில் இவ்வருமான, செலவீன மற்றும் முதலீட்டுச் சுற்றோட்டமானது தொடர்ந்து இயங்கும்.


### 3. மூன்று துறை மாதிரி

மூன்றுதுறை மாதிரியில் வீட்டுத்துறை, நிறுவனத்துறை மற்றும் அரசதுறை என்பன உள்ளடக்கப்படுகின்றன. ஒரு பொருளாதார முறைமையிலே அரசதுறையின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். அரசதுறையானது தனது வருமானத்தினை வரி மூலமாகப் பெற்றுக்கொள்கின்றது. அவ்வரியானது நேரடி வரியாக வீட்டுத் துறையினரிடமிருந்தோ (தனிநபர் வரி) அல்லது நிறுவனத்துறையினரிடமிருந்தோ (உதாரணம் கம்பனி வரி) அறவிடப்படுகின்ற அதேவேளை, மறைமுக வரியையும் நிறுவனத்துறையூடாக

வரைபு 3: மூன்று துறை மாதிரியின் வருமானச் சுற்றோட்டம்



வரைபு 4: நான்கு துறை மாதிரியின் வருமானச் சுற்றோட்டம்




வீட்டுத்துறையிடமிருந்து பெற்றுக்கொள்கின்றது. அதேநேரம், அரசு அவ்வருமானங்களை பண்டங்கள் மற்றும் பணிகள் கொள்வனவு மற்றும் சம்பளங்கள் கொடுப்பனவு போன்ற அரச செலவீனங்களுக்கும் மேலும் அரச மாற்றல்கள் மற்றும் மானியங்கள் வழங்குவதற்கும் பயன்படுத்துகின்றது. இங்கும் வரி வருமானமாக அரசிற்கு சென்றடையும் நிதி மீண்டும் அரச செலவீனமாக வீட்டுத் துறையையும் நிறுவனத் துறையையும் வந்தடைகின்றது. இவ்வருமானச் செலவுச் சுற்றோட்டத்தை வரைபடம் 3இல் பார்க்கலாம்.

### 4. நான்குதுறை மாதிரி

இங்கு வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசதுறை மற்றும் வெளிநாட்டுத் துறை என்பன உள்ளடக்கப்படுகின்றன. இம் மாதிரியில் வெளிநாட்டுத்துறையும் உள்ளடக்கப்படுவதனால் இது திறந்த பொருளாதார மாதிரி எனவும் அழைக்கப்படும். வெளிநாட்டுத்துறை என்னும்போது பண்டங்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அவற்றுக்கான கொடுப்பனவுகள் அத்தோடு மூலதனப் பாய்ச்சல்களையும் உள்ளடக்குகின்றது. இலகுபடுத்தலுக்காக மூலதனப் பாய்ச்சலினை தவிர்த்து நான்கு துறை மாதிரியினை வரைபடம் 4 இனூடாக விளக்கலாம்.

மேலே தரப்பட்ட வரைபடம் 4இன் கீழ் பாதியில் குறிப்பிட்டது போல வீட்டுத்துறையினர் மனிதவலுவை ஏற்றுமதி செய்து வெளிநாட்டு பணவனுப்பல்களை பெற்றுக்கொள்கின்றனர். இது நாட்டிற்கு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலை ஏற்படுத்தும். அதேபோல நிறுவனத்துறை பண்டங்கள் மற்றும் பணிகளை ஏற்றுமதி செய்து அதற்குரிய வருமானத்தைப் பெறுகின்ற அதேவேளை பண்டங்கள் மற்றும் பணிகளை இறக்குமதி செய்து அதற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றன. இங்கு ஏற்றுமதியின் போது வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலும் இறக்குமதியின் போது வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சலும் ஏற்படும். ஏற்றுமதி வருமானத்திலிருந்து இறக்குமதி செலவீனத்தை கழிப்பதனூடாக நாம் தேறிய ஏற்றுமதி வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

### 5. கசிவுகள்

ஒரு பொருளாதாரத்தின் முடிவில்லா வருமானச் செலவுச் சுற்றோட்டத்தில் கசிவுகளை (Leakages) காணக்கூடியதாக இருக்கும். இவை, மீளப்பெறுகைகளாகவோ (Withdrawals) அல்லது உட்சேர்க்கைகளாகவோ (Injection) இருக்கலாம். மீளப்பெறுகைகள் என்னும் போது வீட்டுத்துறையோ அல்லது நிறுவனத்துறையோ தமது வருமானத்தில் ஒரு பகுதியைச் செலவிடாமல் வைத்திருப்பதைக் குறிக்கும். இவை சேமிப்புகளாகவோ, வரியாகவோ அல்லது இறக்குமதிகளாகவோ இருக்கலாம். அதேபோன்று உட்சேர்க்கை என்பது வீட்டுத்துறையோ அல்லது நிறுவனத்துறையோ தமது வருமானத்திற்கு மேலதிகமாக செலவு செய்வதைக் குறிக்கும்.

இவை முதலீடுகளாகவோ, அரச செலவினமாகவோ அல்லது ஏற்றுமதிகளாகவோ இருக்கலாம்.

### 6. பொருளாதார முறைமைக்கும் நிதியியல் முறைமைக்கும் இடையேயான தொடர்பு

மேலே கூறப்பட்டுள்ளவாறு உற்பத்திக் காரணிகள் மற்றும் பண்டங்கள் மற்றும் பணிகளின் பரிமாற்றத்தின் போது நிதிப் பரிமாற்றம் என்பது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. வீட்டுத்துறையினர் உற்பத்திக் காரணிகளை நிறுவனத் துறைக்கு வழங்கும்போது அவ் உற்பத்திக் காரணிகளில் ஒன்றான மூலதனம் பரிமாற்றப்படுகின்றது. மேலும், அவ் உற்பத்திக் காரணிகளுக்கு பிரதியுபகாரமாக நிறுவனத்துறை, கூலி, வாடகை, வட்டி, இலாபம் என்பவற்றை வீட்டுத்துறைக்கு வருமானமாக வழங்குகின்றது. இவை வீட்டுத்துறை மற்றும் நிறுவனத் துறைக்கிடையே நிதிப்பாய்ச்சலை ஏற்படுத்துகின்றன.

மேலும், வீட்டுத்துறையினர் நிறுவனத்துறை உற்பத்தி செய்த பண்டங்கள் மற்றும் பணிகளை கொள்வனவு செய்யும் போது அதற்கான கொடுப்பனவை மேற்கொள்கையில் நிதிப் பாய்ச்சல் ஏற்படுகின்றது. அதேநேரம், வீட்டுத்துறையினர் தமது நுகர்வுச் செலவு போக மீதியை சேமிப்பதும் பின்னர் அதனை நிறுவனத்துறைக்கு முதலீடாக வழங்குவதும் நிதி ஓட்டத்தினை ஏற்படுத்துகின்றது.

அதேபோன்று அரசதுறை, வீட்டுத்துறை மற்றும் நிறுவனத்துறை மீது வரியினை விதிக்கும்போதும் வீட்டுத்துறைக்கு கூலிகள், சம்பளங்கள், மற்றும் மாற்றல்களை வழங்கும் போதும் அத்தோடு நிறுவனத்துறையிடமிருந்து கொள்வனவு செய்கின்ற பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான கொடுப்பனவுகளை செய்யும் போதும் நிதிப் பாய்ச்சல் உருவாகின்றது.

மேலும், வெளிநாட்டுத் துறையூடான பொருளாதார நடவடிக்கைகளின் போது வெளிநாட்டு பணவனுப்பல்கள் மற்றும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி என்பவற்றிற்கான கொடுப்பனவுகள் காரணமாக நிதி ஓட்டம் ஏற்படுகின்றது.

எனவே, ஒரு பொருளாதார முறைமை சிறப்பாகவும் வினைத்திறனாகவும் இயங்குவதற்கு ஒரு தங்குதடையற்ற நிதிச்சுற்றோட்டம் அத்தியாவசியமாகின்றது. அந்தவகையில் அவ்வாறான நிதிச் சுற்றோட்டத்தை மேம்படுத்தி சிறப்பாக கையாள்வதற்கு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நிலைத்திருக்கக்கூடிய மற்றும் வினைத்திறனான நிதியியல் முறைமை அவசியமாகின்றது. ஏனெனில் ஒரு வினைத்திறனான நிதியியல் முறைமையானது நிதியினை மேலதிகமாக வைத்திருப்பவர்களிடமிருந்து நிதிப் பற்றாக்குறையானவர்களுக்கு நிதியினை நகர்த்துவதற்கு வசதியளிக்கின்றது. அந்தவகையில் முதலீட்டாளர்கள் கடன் வழங்குவோர் மற்றும் கடன் வாங்குவோரிற்கிடையிலான நிதி ஓட்டத்திற்கு இது இன்றியமையாததாகும்.

**உசாத்துணை**

Dwivedi, D. N. (2010). Macroeconomics: Theory and Policy (3rd ed.). Tata McGraw-Hill Education. p. 45.

Daraban, Bogdan (2010-06-05). "Introducing the Circular Flow Diagram to Business Students". Journal of Education for Business. 85 (5): 274–279

Mankiw, Gregory (2011). Principles of Economics, 6th edition. Thomson Europe.

# பணக்
# கொடுக்கல்வாங்கல்களின் போது
# அவதானமாக இருப்போம்

**இன்று நீங்கள் பணத்தினைப் பயன்படுத்தும் முறையே எதிர்காலத்தில் உங்களது நிதியியல் ஸ்திரத்தன்மையினை நிர்ணயிக்கும்**

## பணம் உழைத்தலும் அதன் முகாமைத்துவமும்

**(உங்கள் பணத்திற்கு நீங்களே முகாமையாளர்)**

- ❖ நீங்களே பணம் உழைப்பவர்.
- ❖ சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தொழிலினூடாக அல்லது வியாபாரத்தினூடாக பணத்தை உழைத்துக்கொள்ள வேண்டும்.
- ❖ பணத்தை உழைப்பதற்காக உங்களது செல்வத்தையும் காலத்தையும் மற்றும் உழைப்பையும் அர்ப்பணிக்க நேரிடும்.
- ❖ பணம் சம்பாதிப்பது சிரமம் ஆனால் அதனை செலவு செய்வது மிக இலகு.
- ❖ உழைப்பதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிது. ஆனால் செலவு செய்வதற்கோ போதுமானளவு சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.
- ❖ எனவே, சிரமப்பட்டு உழைத்த பணத்தை எவ்வித இலக்குமின்றி செலவு செய்கின்றீர்களா? திட்டத்துடன் செலவு செய்கின்றீர்களா? தீர்மானிக்க வேண்டியது நீங்களே.
- ❖ பணத்தை முகாமைசெய்தல் என்பது திட்டமிட்டுப் பணத்தை நிர்வகிப்பதாகும்.
- ❖ இதன்போது உங்களுடைய பணம்,
  - சேமித்தல்
  - செலவு செய்தல்
  - முதலீடு செய்தல்

  போன்ற விடயங்களுக்கு பயன்படும்.

  இவை தொடர்பில் எவ்வாறு பணத்தை சிந்தித்துப் பயன்படுத்துவது?

## பணத்தை சேமித்தல்

**(உழைக்கும் பணத்தில் ஒரு பகுதியை தினமும் சேமித்தால் உங்களுக்கான பாதுகாப்பு உறுதியாகும்)**

- ❖ வருமானத்தில் ஒரு பகுதியை தினமும் சேமிக்கப் பழகுமிடத்து சில காலத்தில் நீங்கள் அறியாமலேயே பாரிய நிதி சேர்ந்திருக்கும்.
- ❖ உங்களது வருமானத்திற்கேற்ப சேமிக்கக் கூடிய தொகையினை தீர்மானியுங்கள். வருமானம் கிடைத்தவுடனே அத்தொகையினைச் சேமியுங்கள்.
- ❖ சேமிப்பினைப் பழக்கமாக்கிக்கொள்ளுங்கள்.
- ❖ சேமிப்பினூடாக மகிழ்ச்சியடையுங்கள்.

**பணத்தை சேமிக்கும் போது நாம் சிந்தித்துச் செயற்படுவோம்**

- ❖ பொது மக்களின் சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு சட்ட ரீதியாக அதிகாரமும் அனுமதியும் கொண்ட நிலையான நிதி நிறுவனங்களில் மாத்திரமே பணத்தினை வைப்புச்செய்ய வேண்டும்.
- ❖ நீங்கள் கேட்கும் போது உங்களது பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கான அந்நிறுவனத்தின் இயலுமையினை முன்கூட்டியே அறிந்துகொள்ளுங்கள்.
- ❖ கவர்ச்சிகரமான வர்த்தக விளம்பரங்களில் சிக்கிக்கொள்ளாது உங்களது பணத்தை வைப்புச்செய்ய வேண்டிய நிறுவனத்தைநீங்கள் தெரிவு செய்துகொள்ள வேண்டும்.
- ❖ குறுகிய காலத்தில் அதிக இலாபத்தைப் பெற முடியும் எனக்கூறும் கொள்ளைக்கார பண மோசடிகளில் சிக்கிக்கொள்ளாதீர்கள்.
- ❖ அதிக வட்டிகளுக்கு ஏமாற வேண்டாம், வைப்புச் செய்யப்படும் பணத்தின் பாதுகாப்புத் தொடர்பில் அவதானம் செலுத்துங்கள்.

## சிந்தித்து செலவு செய்வோம்

- ❖ வருமானத்திற்கேற்ற விதத்தில் செலவுசெய்ய வேண்டும்.
- ❖ செலவு அதிகமாகும் பட்சத்தில் கடன் பெற நேரிடும்.
- ❖ தேவையின்றி கடன் பெற்றால் கடன் பொறிக்குள் சிக்கிக்கொள்ள நேரிடும்.
- ❖ வருமானத்தின் ஒரு பகுதியை சேமிப்புச் செய்ததன் பின்னர் மீதமிருக்கும் தொகையை திட்டமிட்டு செலவுசெய்ய வேண்டும்.
- ❖ தேவையானதை மட்டுமே கொள்வனவு செய்வோம்.
- ❖ கொள்வனவின் போது ஆசைகளுக்கு அடிபணியாதிருப்போம்.
- ❖ கவர்ச்சிகரமான வர்த்தக விளம்பரங்களுக்கு ஏமாறாதிருப்போம்.
- ❖ கொள்வனவின் போது அவசரப்படத் தேவையில்லை, ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டும்.
- ❖ சில பண்டங்களை கொள்வனவு செய்வதைத் தாமதிக்க முடியும்.

❖ குடும்பச் செலவுகளுக்காக செலவுத் திட்டமொன்றினை தயாரித்துக் கொள்ள முடியும்.

❖ அடிப்படைத் தேவைகள், அத்தியாவசியமானவை மற்றும் ஏனையவை என்ற அடிப்படையில் செலவினை வகுத்துக்கொள்ள முடியும்.

❖ அத்தியாவசியமற்ற (அனாவசியமான) பொருட் கொள்வனவு என்பது பணத்தை வீண்விரயம் செய்தலாகும்.

## முதலிடுகின்ற போது அவதானமாக இருப்போம்

❖ முதலீடு என்பது வருமானத்தை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் பணத்தைப் பயன்படுத்துவதாகும்.

- வங்கியொன்றில் நிலையான வைப்பு
- சிறு வர்த்தகம்
- வேளாண்மை அல்லது கால்நடை வளர்ப்பு
- சிறு கைத்தொழில்

போன்றவற்றில் உங்களுடைய அறிவு மற்றும் அனுபவத்திற்கிணங்க உங்களுக்குள்ள காலம் மற்றும் இடவசதிகளை கருத்திற்கொண்டு வருமானத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான செயற்பாடொன்றில் உங்களுடைய பணத்தை முதலிட முடியும்.

❖ நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் விரைவில் செல்வந்தராக முடியுமென கூறும் பிரமிட் திட்டங்களில் சிக்கிக்கொள்ள வேண்டாம்.

❖ அனைத்து முதலீடுகளிலும் இடர்நேர்வு காணப்படுகிறது. அது பற்றி அறிந்துகொள்ளுங்கள். இடர்நேர்வை குறைத்துக்கொள்வதற்கு முன்கூட்டியே உத்தேசியுங்கள்.

❖ முதலீட்டின் போது உங்களுடைய பணம் போதவில்லையாயின் கடன் பெற நேரிடலாம்.

- அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் கடன் பெறவும்.

- கடனை மீளச்செலுத்துதல் பொறுப்பொன்றாகும். அதன்படி, கடனை மீளச்செலுத்த வேண்டிய காலம் எவ்வளவு? தவணைகளின் எண்ணிக்கை? வாராந்தம் அல்லது மாதாந்தம் செலுத்தவேண்டிய வட்டிவீதம் எவ்வளவு? போன்ற விடயங்கள் பற்றி கடன் பெறுவதற்கு முன்னரே சரியாக அறிந்துகொள்ளுங்கள்.

- கடன் தவணை மற்றும் வட்டித் தொகை செலுத்துவதற்குப் போதுமான வருமானம் எதிர்காலத்தில் கிடைக்குமா என்பதை முன்கூட்டியே கணக்கிட்டுப்பார்க்கவும்.

- வட்டி கணக்கிடும் முறை அதிகரித்துச்செல்லும் மீதியின் அடிப்படையிலா? சமச்சீர் முறையிலா? தண்டவட்டி மற்றும் ஏனைய கட்டணங்கள் உள்ளனவா என்பன பற்றி அறிந்துகொள்ளுங்கள்.

- கடனுக்காக வைக்கவேண்டிய பிணை யாது? ஏதேனும் காரணத்தினால் கடனை மீளச்செலுத்த முடியாது போனால் என்ன நடக்கும் என்பதை விசாரித்து அறிந்துகொள்ளவும்.

- கடன் பணத்தை வருமானம் உழைக்கும் வியாபாரத்திற்கு மாத்திரமே பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானதாகும்.

# சிக்கிக்கொள்ள வேண்டாம்!

❖ தனது பணத்தின் விரயம் தொடர்பில் அக்கறையற்ற, திட்டமிட்டு கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளாத மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் போது அதிகளவு சிந்திக்காதவர்கள் இலகுவில் கடன் பொறியில் சிக்கிக்கொள்வர்.

❖ தற்போதுள்ள கடனிலிருந்து மீள்வதற்கு புதிதாக இன்னுமொரு கடனைப் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பின் குறித்த நபர் சந்தேகமின்றி கடன் பொறிக்குள் அடைக்கப்பட்டிருப்பார்.

❖ ஆகவே, அவதானமாக இருங்கள்.

❖ அதிகளவான பணத்தை மிகவிரைவில் உழைத்துக்கொள்ளலாமென கூறி உங்களுடைய பணத்தை ஏமாற்றிப் பெற்றுக்கொள்ளும் மோசடி திட்டங்களில் சிக்கிக்கொள்ள வேண்டாம்.

❖ வீடு வீடாகச் சென்று கடன் தரும் நபர்கள், நிறுவனங்கள் இருக்கின்றன. அவை சட்டரீதியற்ற நிறுவனங்களாக இருக்கலாம். கடனுக்கான காரணங்கள் இருப்பினும் இல்லாவிட்டாலும் கேட்டவுடன் கடன் கிடைத்துவிடும். எனினும், மீளச்செலுத்துகையின் போது அதிக வட்டியினைச் செலுத்த நேரிடும்.

❖ இவ்வாறான விடயங்களை இனங்காண்பதற்கு தவறும் பட்சத்தில் அல்லது அறிந்துகொள்வதற்கு தவறும் பட்சத்தில் நீங்கள் கடன் பொறிக்குள் மாட்டிக்கொள்ள நேரிடும்.

**நீங்கள் உழைக்கும் பணத்தை**

**முறையான விதத்தில் உபயோகப்படுத்துவதற்கு உங்களிடம் இருக்கவேண்டிய அறிவு மற்றும் இயலுமை என்பதையே நிதியியல் அறிவு என அழைக்கப்படுகிறது.**

**உங்களையும் உங்களது நிதியியல் அறிவையும் மேம்படுத்திக்கொள்ளுங்கள்.**

தொடர்பூட்டல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

0112 477966 cbslgen@cbsl.lk www.cbsl.gov.lk